1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams:
"CATHOLIC PRESS"
JAFFNA.

Telephone:
NO. 100

# சத்தியவேத பாதுகாவலன்

" கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம் "

78-ம் புத்தகம் 17-ம் இல. யாழ்ப்பாணம் 1953-ம் ஆண்டு வைகாசிமாதம் 7-ந் திகதி வியாழக்கிழமை—பிரதிசதம் 10

## தேவதாய் நமதுதாய்

"உனக்கும் ஒரு பெண்ணுக்கும் பகையை மூட்டுவோம்; அவள் உன் தலையை நசுக்குவாள்" என்று நரகசர்ப்பத்துக்குத் தண்டனை விதித்தார் சர்வேசுரன். அந்நாள்முதல் பிதாப்பிதாக்களும், தீர்க்கதரிசிகளும் பசாசின்தலையை நசுக்குவதற்குப் பிறக்கப்போகிறவளுக்காகக் காத்திருந்தனர். அதே பெண் மெசியாவுக்குத் தாயாவாள் என்று தீர்க்கதரிசிகள் மூலமாய் அறிந்த யூதகுலப் பெண்கள் எல்லோரும் அப்பாக்கியத்தை அடைந்துகொள்ளப் பேராவலுடன் ஆசித்திருந்தனர். தேவனால் வாக்களிக்கப்பட்டவளும், பல்லாயிரவருடங்களாக எதிர்பார்க்கப்பட்டவளுமான அப்பெண் அன்னம்மாள்-சுவக்கீன் என்ற தம்பதிகளின் அருந்தவப் புதல்வியாகப் பிறக்கின்றாள். சென்மபாவதோஷம் அவளைச் சற்றுமே அண்டாததால் அவள் பசாசின்தலையை நசுக்குகிறாள். ஆதாம்-ஏவாளின் பாவத்தால் உலகத்தைப்பீடித்த தேவசாபத்தை நீக்குகின்றாள். பெண்குலத்தைத் தொடர்ந்துவந்த பழியை அகற்றுகின்றாள். அன்னையின் பிறப்போடு உலகின் சாபம் அகலுகின்றது. சந்தோஷம் பிறக்கின்றது. உலக இரட்சணியம் உருவெடுக்கின்றது.

"தேவவரங்களால் பூரணமானவளே வாழ்க! தேவன் உம்மோடு வாசஞ்செய்கிறார்; பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவள் நீரே; தேவகுமாரன் உம்மிடம்பிறப்பார்; அவருக்கு 'யேசு' என்னும்திருநாமம் சூட்டுவீர்" என்று உரைத்த தேவதூதனின் வாழ்த்துக்கு "உம்முடைய வார்த்தையின்படியே என்னிடம்எல்லாம் நிறைவேறக்கடவது" என்று உரைத்தாள். நசரேத்தூரின் கன்னிமரியம்மாள் அன்றே தேவசுதனைக் கருத்தரித்தாள். உலகின் பாவ இருளகற்றும் ஞானச்சூரியனைத் தன்உதரத்தில் தாங்கினாள். தேவசித்தத்துக்கு முற்றும் அமைந்தகீழ்ப்படிதலாலே ஏவாளின் கீழ்ப்படிதலற்ற செயலால் விளைந்த தீமைகளைப் பரிகரித்தாள்.

தான் அற்புதமாகக் கருத்தரித்த திருக்குழந்தையைக் கன்னிமரியம்மாள் பெத்லகேமில் அற்புதமாகவே பெற்றெடுக்கின்றாள். இரட்சகரது பிறப்பின்மகிழ்ச்சியால் வானவர் கீதம்பாடுகின்றனர். ஆட்டிடையர் தேவனுக்கு நன்றிசெலுத்தப் பெத்லகேம் குகைக்கு விரைந்துஏகுகின்றனர். மூவரசர் பொன், தூபம், மீறையுடன் தேவபாலனை ஆராதிக்கவருகின்றனர். அன்றைய மக்கள் கண்ணிருந்தும் காணாத குருடரைப்போல் தாங்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த பாக்கியத்தை அடைந்தும் அதைஉணர்ந்ததில்லை. கன்னிமரியம்மாள் தேவனின் தாய்என்று அவர்கள் அறிந்துகொள்ளவில்லை. தங்களைப் பாவத்தினின்று மீட்கப் பிறந்த இரட்சகரின் தாய் தங்கள்மத்தியில் சஞ்சரிக்கிறாள் என்னும் உண்மையை அறிந்திருப்பார்களேயானால் அவர்கள் அடையக்கூடிய ஆனந்தத்திற்கும் அளவுண்டாமா? அன்று அவர்களுக்குக் கிட்டாத பெரும் பாக்கியம் நமக்குக்கிடைத்திருக்கிறது. நசரேத்தூரின் கன்னிமரியம்மாளே தேவனால் நமது ஆதித்தாய் தந்தையருக்கு வாக்களிக்கப்பட்டவள். நரகசர்ப்பத்தின் தலையை நசுக்கினவள். உலகஇரட்சகரை ஈன்றளித்தவள். அவளே தேவனின் தாய். அவளேநமதுதாய். இந்த உண்மைகளை நாம நன்றாயறிவோம். ஆகவே, நமது இரட்சகரை ஈன்றதாயின் பெருமைகளைநினைத்து நாம் சந்தோஷப்படாதிருப்பது எங்ஙனம்?

கன்னிமரியம்மாளின் பெருமைகளை நினைக்குந்தோறும் நாம் ஆனந்தங்கொள்ளக் காரணம்ஒன்று உள்ளது. அவள் மனிதனைப்பிறந்த தேவனின் தாயாக இருப்பதுடன் நமது தாயாகவும் இருப்பதே அந்தக்காரணம். தேவதாய் நமது தாய். ஆகவே, தாயின்பெருமை சேயின் பெருமை. சேயின்பெருமை தாயின்பெருமை. நமது அன்னையின் பெருமைகள் நமது பெருமைகளன்றோ! யாதாமொன்றை நினைத்துப் பெருமைகொள்ளும் ஒருவன் தனது பெருமையின் காரணமாக மகிழ்ச்சியும் அடைவது இயற்கையன்றோ! நமது அன்னையின் மகிமை பெருமைகளோ எண்ணிலடங்காதன. 'தேவனின்தாய்' என்

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

## ஜனாதிபதியும் சமாதானமும்

ருஷிய சோவியற்அரசின் புதியதலைவர்கள் அதிகாரத்துக்குவந்தார்கள். உடனேயே உலகப் பிரச்சினைகளுக்கு ஒத்துழைப்பின் மூலம் பரிகாரம் காணத் தாம் சமஅளவு தயாராயிருப்பதாக ஜனாதிபதி ஐசன்ஹாவர் அறிவித்தார். அப்புறம் பன்முறைகள் அவர் இந்தக் கோரிக்கையைத் திரும்பத் திரும்ப வெளியிட்டுள்ளார். நாளதுவரை சோவியற் அரசினிடமிருந்து அதற்குச் சம்பிரதாயப்பிரகாரம் பதில்இல்லை.

உலக சிக்கல்களைத் தீர்க்கும்படி மற்றநாடுகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தச் சோவியற்ருஷியா தயாரென்று பிரவ்டாஎன்ற சோவியற் தினசரிப் பத்திரிகை எழுதியிருக்கிறது. இது ஓரளவு உற்சாகமளிக்கிறது. என்றாலும், அப்பத்திரிகையின் தலையங்கத்தைச் சோவியற் அரசாங்கத்தின் பதிலாகக் கொள்வதற்கில்லைஎன்று வெள்ளைமாளிகை சுட்டிக்காட்டுகின்றது.

வெறுஞ்சொற்களைக்கொண்டு அல்ல, ஆனால், செயல்களைக் கொண்டுசோவியற்அரசு தன்னுடைய சமாதான ஆசையை நிரூபிக்க வேண்டும் என்று ஜனாதிபதி ஐஸன்ஹாவர் தெரிவித்தார். அவர் தற்போதைய போட்டாபோட்டி ஆயுதஉற்பத்தியைக்குறித்து மனக்கிலேசத்துடன் மொழிந்தார். "உலகம்வாழ வேறுவழியே இல்லையா?" என்று கேட்டார். இந்தக்கேள்விக்கு அவரே விடையும்பகர்ந்தார். உலகம் உய்ய வேறுவழி உண்டுஎன்று அழுத்தந்திருத்தமாக அவர் கூறினார். ஆயுதங்களைக் குறைத்தல், ஆஸ்திரிய சமாதான உடன்படிக்கையை நிறைவேற்றுதல், ஜேர்மனியில் சுயேச்சையான தேர்தலை நடத்துதல்முதலிய காரியங்களில் ருஷிய பிரதமரான மலன்கவ் ஒத்துழைக்கும்பட்சத்தில் உலகம் அமைதியானவழியில் உய்யவழி உண்டு என்று கூறினார்.

மேலும் பரீஸ்நகரில்கூடிய வடஅத்திலாந்திக் ஒப்பந்தஸ்தாபனத்தைச்சேர்ந்த அதிகாரிகளுக்குவிடுத்தசெய்தியிலே:நாகரீகம்படைத்தநாடுகளைத் தங்கள் சக்தியிலும், சாதனபலத்திலும் அத்துணை பெரும்அளவு தற்காப்புக்காக ஈடுபடுத்தும்படியான நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறதே என்று மனம்வருந்தினர். இந்தச்சக்திகளை, எல்லாத்தேசங்களும் சமாதானத்துக்கு மனப்பூர்வமாகஉழைத்தால், ஆக்கவேலைகளுக்கு அர்ப்பணிக்க முடியும்என்று அவர்அச்செய்தியில் அறிவித்திருந்தார்.

மறுபடியும் செய்திநிருபர்கள் மகாநாட்டில் பேசுங்கால்: பகுத்தறிவுக்குப் பொருத்தமான எந்தக்காரியத்தையும்செய்து, சமாதானத்தின் அத்தியாவசியத்தைச் சோவியற் ருஷியாவுக்கு உணர்த்தத் தயார்என்று குறிப்பிட்டார். பின்னர் வாஷிங்டன் நகரில் பேசியபோது: எல்லாமக்களும் சமாதானத்தை விரும்புகிறார்கள் என்றகருத்தை அடிப்படையாகக் கொண்டே அமெரிக்க வெளிநாட்டுக் கொள்கை செயற்படுகின்றது என்பதை விளக்கினர். "அமெரிக்காவைப் பொறுத்தவரை, அதுசமாதா

— போல் போட் அவர்கள் —

னத்தை விரும்புவதிலே தன்னலம்எதுவுமே பேணவில்லை; பிறரிடமிருந்து கண்ணியத்தையும், பரஸ்பரமரியாதையையுமே கோருகின்றது; பிறநாடுகள் யாவற்றையும் கண்ணியமாகவும், மரியாதையாகவும்நடத்த அமெரிக்கவரசு சித்தமாகஇருக்கிறது" என்றார்.

அமெரிக்க ஜனாதிபதியின் பேச்சு உலகெங்கும் ஒவ்வொரு தேசத்திலும் சாதகமான எதிரொலியைக் கிளப்பியுள்ளது. அது எதைக்குறிக்கிறது? உலக நெருக்கடி தீரவேண்டும்என்பதில் உள்ள அக்கறையையே குறிக்கிறது. "உலகம் வாழ வேறு வழியே இல்லையா?" என்று அவர்கேட்டாரே; அந்தக்கேள்வி உண்மையிலே உலகத்தில வெவ்வேறுஇடங்களிலுமுள்ள மக்கள்கேட்கும் கேள்வியே. அதனால்தான் அவர் "அமெரிக்கவரசு இந்தச்சமாதானதிட்டத்தை அறிவிப்பதில் சுயநலம்எதுவும் கொண்டதல்ல; அரசியல் அதிகாரவெறி எங்களுக்கு இல்லை; சமாதானம் வேண்டும்என்ற உலகமக்களின் துடிப்பையே எங்கள்கோரிக்கை பிரதிபலிக்கிறது; சேர்ந்துவாழ்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

# அர்ச். பிரான்சீஸ் சவேரியாரின் திருக்கர பகிரங்க காட்சி

(சென்றவாரத் தொடர்ச்சி)

தாங்கள் தங்குவதற்கென்று யாத்திரிகர்கள்பலரும் மூன்றுமாதங்களுக்குமுன்னதாகவே நகரிலுள்ள சகலஹொட்டல்களிலும் இடவசதிகள் செய்து இடங்களையெல்லாம் பிடித்துக்கொண்டமையாலே பிறவிடங்களிலிருந்து வந்திருந்த மக்கள் அநேகர் பிறதர்மாரின்கல்லூரியிலும், சிஸ்றர்மாரின் மடங்களிலும் தங்குவதற்கான வசதிகள் அளிக்கப்பெற்றார்கள். இவ்வைபவம் ஆரம்பமாகி முடிவாகிறவரையிலே பொலிஸ்பட்டாளம் இரவு பகலாகக் காவல்புரிந்து தங்கள் கடமையைத் திறமையாகஆற்றியதை மேற்றிராணியாண்டவர்உட்படப் பலரும் வியந்து பாராட்டினார்கள். 19-ந் திகதி தொடக்கம் முத்தினங்களாகச் சாயந்தரம் 4-30 மணிமுதல் தொடர்பாக இரு பூசைகள் நிறைவேறிவந்தன. பூசைக்குமுன் "றெடெம்ரோறிஸ்ற்" என அறியப்படுகின்ற திருமீட்பர்சபைக் குருமாராலும், தமிழ்க்குருமாராலும் ஆங்கிலத்திலும், தமிழிலும் அருமையானபிரசங்கங்கள் செய்யப்பட்டன. 21-ந் திகதி சனிக்கிழமைகாலை மக்காஓ மேற்றிராணியாண்டவர் பெரியபாடற்பூசை நிறைவேற்றினார்.

கடைசியாக, அதிக மனவருட்சிக்கும், அகமகிழ்ச்சிக்குமுரியதினம் மறுநாளாகிய 22-ந் திகதி ஞாயிற்றுக்கிழமையே. அன்றுநிகழவிருக்கும் அலங்கிர்தகாட்சியைக் கண்டுகளிகூர வருவான்போன்று சூரியனும் தனது அழகியகிரணங்களைப் பரப்பிக்கொண்டு கீழ்த்திசையில் எழுந்தான். அன்று காலை 7-30 மணிக்கு ஏனையமூன்று மேற்றிராணிமாரும், குருப்பிரசாதிகள் அநேகரும், பிறதர்மார், கன்னியாஸ்திரிமாரும், மற்றுஞ்சமஸ்தவிசுவாசிகளும் புடைசூழ்ந்துநிற்க, கதிர்ப்பாத்திரம்போன்று கண்ணாடிபதிக்கப்பெற்ற தாய்த் திருப்பண்டம் வைக்கப்பெற்றிருந்த அருளிக்கத்தை மலாக்கா மேற்றிராணியாண்டவர் காத்தேந்தியவாய்ச் சவேரியார் கோவிலிலிருந்து பெரியஊர்வலமாக மலைக்கோவிலுக்குக் கொண்டுசென்ற பயபக்திக்குரிய மனோகரகாட்சியும், வீதியின்இருமருங்கும் கொடிவிட்டவண்ணம்நின்றும், தங்கள் வீடுகளின் மேல்மாடிகள், உயர்ந்த மதில்களில்நின்றும் ஆசாரமரியாதையுடன் பார்த்துநின்ற மக்களின் ஆனந்தகாட்சியும், ஊர்வலத்தை இவர்ந்து செல்லவிடாது ஆங்காங்கு வழிமறித்துப் பளீர்பளீரென்று படம்பிடித்து நின்றவர்கள் அளித்தகாட்சியும், பொலிஸ்பட்டாளம் அணிவகுத்து நின்றகாட்சியும் எவர்மனதையும் ஓர் அருட்டு அருட்டாமலும், எவரையுமே பரவசமடையச் செய்யாமலும் விட்டிருக்கமாட்டாவென்று சொல்ல வேண்டியதில்லை.

ஊர்வலம் மலைஉச்சியை அடைந்ததும் ஐயாயிரவர்வரையிலென மதிக்கப்பட்ட விசுவாசிகளின்சமுகத்திலே அர்ச். சவேரியாரின் திருமேனி அப்போதுஅடக்கஞ்செய்யப்பட்டதென்று முன்னர்நான் எடுத்துக்கூறிய கோவிலிலே அவருடைய பாரியதிருச்சுரூபம் ஒன்று மந்திரித்துப் பீடத்தின்மேல் எழுந்தருளச்செய்து வைக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து இந்தோனீஷியாவில் இருந்துவருகின்ற பாப்பரசரின் ஸ்தானாபதிஆண்டவராலே றேடியோ மலாயாவின் உதவியைக்கொண்டு ஒலிபரப்பிப் பெரியபாடற்பூசை நிறைவேறியது. கோவில்கொள்ளாது அதனைச் சூழவர முற்றுகையிட்டவண்ணம் தேங்கியிருந்த விசுவாசிகள்அனைவர்க்கும் மக்காஓ மேற்றிராணியாண்டவராலும், பாங்கொக் மேற்றிராணியாண்டவராலும் வெளியிலே அவரவர்க்கெனச் சித்தஞ்செய்யப்பெற்றிருந்த பலிபீடங்களில் ஏககாலத்தில் திவ்விய பூசைகள்நிறைவேறின. ஸ்தானாபதி ஆண்டவரது பூசையின்போது அர்ச். சவேரியார்கொண்டிருந்த தேவநேசத்தையும், அவர்கொண்டிருந்த ஆன்ம இரட்சணிய தாகத்தையும்பற்றிக் கேட்டிருந்தார்மனதைப் பெரிதும் அருட்டக்கூடியவகையிலே ஆங்கிலத்திலும், தமிழிலும், சீனத்திலுமாக மூன்று பிரசங்கங்கள் செய்யப்பட்டன. குயிலினுமினிய குரலோசையிலே பாடகர் குழாமின் இன்பகரமான ஞானக்கீதங்கள் சகலரையும் பக்திப்பரவசங்கொண்டு மெய்மறக்கச் செய்துவிட்டன. பூசைமுடிவில் பரிசுத்த பாப்பாண்டவரின் ஆசீர்வாதம் ஸ்தானாபதி ஆண்டவரால் அருளப்பட்டது. இத்திருவைபவங்களின்போது தேவ நற்கருணை பெற்றவர்களின் தொகை நாளொருவண்ணமாய் அதிகரித்துவந்தமை மிகவும் வியக்கத்தக்கதாகும்.

அன்றிரவு விசேஷ அழைப்பின்பேரில் அநேக பிரபலஸ்தர்கட்கு மலாக்கா மேற்றிராணிஆண்டவராலே ஓர்பெரு விருந்துபசாரணை நடத்தப்பட்டது. நூற்றுக்கதிகமானோர் அதில் கலந்துகொண்டனர். சம்பிரமமான இவ்விருந்தோடும், அன்றிரவுகாண்பிக்கப்பட்ட அர்ச். சவேரியாரின் புனித சரித்திரக் காட்சியோடும் இப்பெரும் பாக்கியம்நிறைந்தவைபவம் இனிதே பூர்த்தியாயிற்று.

நிற்க, திருப்பண்டக்காட்சிகள் உலகில்நடந்தேறுகின்ற பொருட்காட்சிகள்போன்ற பொழுதுபோக்குக் காட்சிகளுமன்று, வேடிக்கைவினோதக்காட்சிகளுமன்று. ஆனால் ஆன்மநலன்கள் அளிக்கும் ஞானக்காட்சிகளாகும். இவைகள் மனித இருதயங்களிலே சாம்பருள்அக்கினிபோல் மறைந்து அணைந்துபோகும் தறுவாயிலிருக்கும் தேவநேசத்துக்குப் புத்துயிர் அளிப்பனவாகும். தேவநேசமின்றிக் குளிர்ந்து விறைத்துப்போன இருதயங்களிலே ஞானஉஷ்ணத்தைப் பிறப்பிப்பனவாகும். வேதகடமைகளைச் சரிவர அனுசரித்துவர எவர்க்குமே தூண்டுகோல் போன்றனவாகும். இங்குகாண்பிக்கப்பெற்ற அர்ச். சவேரியாரின் திருப்பண்டகாட்சியிலிருந்து கற்றுக்கொள்ளவேண்டிய படிப்பினை என்ன? அர்ச். சவேரியாரைப்போல நாம் வரமுடியாதென்றாலும் ஏதோ ஓரளவில் அவரைக்கண்டுபாவித்து ஆன்ம இரட்சணிய ஆவல்கொண்டு, எமதுசொந்தஆத்துமத்தை ஈடேற்றப் பாடுபடுவதுடன், பிறர்ஆத்தும இரட்சணியதாகங்கொண்டு மற்றவர்களின் ஆத்துமங்களையும் ஈடேற்ற நம்மாலான பிரயாசையெல்லாம் எடுத்துவரவேண்டுமென்பதே. சுபம்!

### காட்டில் ஒளித்தவன்

மன்னார்ப்பகுதியிலே ஊத்தைவாயன் குளம் எனும் கிராமத்தைச் சேர்ந்தவனும், அங்குமூவரைக் கத்திகொண்டுகுற்றியபின்னர் ஓடிச்சென்று காட்டில் ஒளித்துக்கொண்டானெனச் சொல்லப்படுகிறவனுமான பாண்டிஎன்பவன் மன்னார்ப்பொலிசரால் மூன்று தினங்களாகத் தேடியலைந்து மூன்றாம் நாள்கண்டுபிடித்துக் கைதுசெய்யப்பட்டான். காயமடைந்தமூவரும் மன்னார் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பெற்று அங்கே அவர்களில்ஒருவனான அத்தினமலை என்பவன் இறந்துபோயினான்.

## சுதேச வர்த்தமானம்

### அடைக்கலத் திருநாள்

கொழும்புத்துறையிலே கோவில்கொண்டு எழுந்தருளியிருக்கும் அர்ச். சூசைமாமுனிவரின் அடைக்கலத்திருநாள் சென்ற 3-ந்திகதி ஞாயிறுவாரம் வழமைபோலப் புத்திச்சிறப்பாய்க் கொண்டாடப்படலாயிற்று. அழகிய இயற்கைமலர்களாலும், செயற்கை மலர்களாலும் எழிலுறச் சிங்காரிக்கப்பெற்றிருந்த கோவிலிலே அன்று காலை 7 மணிக்கு அர்ச். சூசையப்பரின் பக்தர்களும், ஆசிரியமாணவர், மாணவிகளும், பழையமாணவர்களும் திரளாகக் குழுமியிருக்க, வண. எப். எஸ். நல்லையா, வண. பி. நிக்கலஸ் குரவர் இருவரும் துணைபுரிய, வண. பி. ஈ. அல்பிறெட் சுவாமியவர்களால் திருநாள் பாடற்பூசை நிறைவேறியது. அவ்வேளை சுவாமியவர்கள் "பிரமாணிக்கமுள்ள ஊழியன் பாராட்டப்படுவான்" என்பதைப் பீடிகையாகக் கொண்டு தேமாரிபொழிந்தவாறாகச் செய்தபிரசங்கம் வடிதங்கம்போன்றிருந்தது. பிற்பகல் 4-30 மணிக்குப் பெருந்திரளான பக்தர்கள் சமுகமளித்திருக்க, அதிவண. ஜே. நிக்கலஸ் சுவாமியவர்கள் பலகுருமார்சமேதராய் வேஸ்பர் பாடியதன்மேல் பக்தகோடிகள் புடைசூழச் செபவோசை, மணியோசை, சங்கீதஓசைகள் மத்தியிலே சஞ்சூசைமாமுனிவர் பூந்தேர்மீது பவனிகொள்ளலானார். தாபனமைதானத்திலே அனைவரும்தேங்கிநிற்க, திருவளனார் அலங்காரபந்தரின்கண் அமைத்திருந்த அழகியசிம்மாசனத் தெழுந்தருளினார். அத்தருணம் அம்மாதவனில் மிக்கான பக்திபூண்ட வண. எச். ஜெஸ்லண்ட் சுவாமியவர்கள் அரியதோர் பிரசங்கஞ் செய்தனர். அதன்மேல் சூசைமாதவனின் தவறாதஅடைக்கலத்தில் மேற்றிராணிமார்முதல் விசுவாசிகளீறாகச் சகலரும் ஒப்படைக்கப்பெற்றார்கள். பின்னர் கோவில்முன்றிலிலே அமைக்கப்பட்டிருந்த அலங்காரபீடத்தில் திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதம் அருளப்பெற்றுத் திருநாள் இனிதே நிறைவாயிற்று. தாபனதலைவரான வண. எல். ஏ. சிங்கராயர்சுவாமியவர்கள் சுகத்தாழ்வுகாரணமாகக் கொழும்பு சென்றமையால் அவரிடமாக வண. எம். எஸ். நல்லையா சுவாமியவர்கள் பதிற்தலைவராயிருந்துசகலத்தையும் சிறப்பாகநடத்தி வைத்தனர்.

### கண்டிஅரசனின் பீட்டப்பிள்ளை

கண்டிக் கடைசிஅரசனான ஸ்ரீ விக்கிரம இராசசிங்கனின் பீட்டப்பிள்ளையென்று தன்னை உரிமைபாராட்டிக்கொள்ளுகின்ற ஸ்ரீ யோகானந்த இராசசிங்க தனதுஇளம்மனைவியான ஸ்ரீமதி குமாரி அனசூய தேவினியுடன் இலங்கைக்குத் திரும்பியிருக்கின்றார். இவரின்மனைவி மத்தியஇந்தியாவிலே தெக்கணபீடபூமியைச்சேர்ந்த மங்கியர்பாத இராசகுடும்பத்தைச் சேர்ந்தவள். இருவரும் சென்ற 1952-ம் ஆண்டு ஆவணிமாதம்விவாகஞ்செய்துகொண்டபோதிலும் இங்குதானே சொந்தமாக வசிக்கஎண்ணிய கணவர் தனதுமனைவியை அழைத்துவருவதற்காகச் சென்ற மாதமே இந்தியா சென்றிருந்தார். இவர் புத்தசமயத்தவர். ஓர்இந்துசமயியான இவர்மனைவி அப்போதே இங்கு வராதகாரணம், ஐதிரபாத் சர்வகலாசாலையிலே தெலுங்கிலும், மைசூரின் அரசாங்கபாஷையாகிய கனறியிலும் டிப்ளோமா பெறுதற்கான படிப்பை இன்னமும் முடியாதிருந்தமையே. வர்ணங்கொண்டுசித்திரந்தீட்டுவதிலும், நீந்துவதிலும் இவள் நல்லபயிற்சிபெற்றவள். இருவரும தெகிவலையிலே சஞ்சரித்துவருவார்கள். ஸ்ரீ யோகானந்த இராசசிங்கவுடன் அவர்சகோதரரான ஸ்ரீ சுக்குஇராசசிங்கவும் வந்திருக்கின்றார்.

### கல்லூரி ஆரம்பம்

ஈஸ்றர்விடுமுறைமுடிந்து சம்பத்திரிசியார்கல்லூரி இம்மாதம் 19-ந் திகதியாகிய வருகிறசெவ்வாய்க்கிழமைகாலை வழமைபோலஆரம்பமாகும்.

### இந்தியகருதினால்

ஆஸ்திரேலியாவிலிருந்து இந்தியாவுக்குச் செல்லும்வழியிலே சென்ற 4-ந்திகதி திங்கட்கிழமை இலங்கைக்கு விஜயஞ்செய்யவிருந்த பம்பாய்நகர் அதிமேற்றிராணியாரான கருதினால் வலேரியான் கிறாசியாஸ் ஆண்டவர் தமக்குஉண்டான சுகத்தாழ்வுகாரணமாக அங்கு பிறிஸ்பேண்நகர ஆஸ்பத்திரிஒன்றில் சிகிச்சைபெற்று வருகின்றார். அதனால் அன்றுதினம் அவர் இலங்கைக்கு வந்துகொள்ள இயலாதவராயினர். தாம் சுகமடைந்ததும் கப்பல்மூலமாகப் பிரயாணஞ்செய்ய விருப்பதாகக் கொழும்பு அதிமேற்றிராணியாருக்குத் தந்திமூலம் சென்ற வியாழக்கிழமை அவர் தெரிவித்திருக்கின்றார். அதனால் அவரது இலங்கை விஜயம் பிந்தியதோர் திகதிக்குப் பின்போடப்பட்டிருக்கிறது.

### நமது மனேஜர் சுவாமியார்

நமதுஅச்சக மனேஜராகக் கடந்த ஈராண்டளவாய்க் கடமையாற்றிவந்தவரான வண. எவ். ஜே. ஸ்ரனிஸ்லாஸ், பி. ஏ. சுவாமியவர்கள் அனுராசபுரத்து அர்ச். சூசையப்பர்கல்லூரி அதிபராக நியமனம்பெற்றுச் செல்வதையிட்டு அவருக்குப் பிரியாவிடைகூறுமுகமாக அச்சகத்தார்அனைவரும் சென்ற 30-ந் திகதி வியாழக்கிழமைகாலை அர்ச். சூசையப்பரின் சிற்றாலயத்தில் ஒன்றுகூடிச் சுவாமியவர்கள் நிறைவேற்றிய திவ்வியபூசைகண்டு அவருடைய கருத்துகளுக்காக மன்றாடிக்கொண்டார்கள். அதன்மேல் சுவாமியவர்களையும், அச்சகப் புதியமனேஜரான வண. ஜே. ஸ்கூர்மன்ஸ் சுவாமியவர்களையும் நடுவிடமாகக்கெண்டு பிரதிமைப்படம் பிடிக்கப்பட்டபின் இதற்கென அழகுறச் சிங்காரிக்கப்பெற்றிருந்த அர்ச். சூசையப்பர் கூட்டச்சாலையிலே பிரிவோபசாரவிழா நடந்தேறியது. பிரியாவிடைநாயகர் புதிய மனேஜர்சுவாமியார்சமேதராய் உயர் ஆசனத்தில் அமர்ந்ததும் புஷ்பாரஞ்சூட்டிப் பிரியாவிடைப்பத்திரம் படித்துக்கொடுத்து, அன்பின் ஞாபகசின்னம் சங்மானிக்கப்பெற்றனர். ஈற்றில் சுவாமியவர்களின் நன்மதியோடும், நன்றித்துதியோடும், புதிய மனேஜர் சுவாமியவர்களின் உற்சாகமூட்டும் மொழிகளோடும் பிரியாவிடைவைபவம் நிறைவாயிற்று.

### கல்லோயாநெல்வேளாண்மை

கல்லோயா அபிவிர்த்திச்சபையானது அங்கு 1,50,000 ஏக்கர் காணியை நெல்வேளாண்மைக்குள்ளாக்குதற்குத் திட்டஞ்செய்கின்றது. இது வருடத்தில் ஒருபோகம் மாத்திரமே. ஆனால், காணிஅபிவிர்த்தி மந்திரியாரோ இருபோகங்களிலும் அங்குநெற்செய்கைநடத்த முடியுமாஎன்பதுபற்றி ஆலோசித்துவருகின்றார். அப்போது கல்லோயாப்பள்ளத்தாக்கிலே விளையும் நெல்லானது இலங்கையிலே வருடம் ஒன்றுக்குச் செலவாகும் 7,50,000 தொன்அரிசியில் ஏறக்குறைய ஏழிலொருபங்கை உதவக்கூடியதாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. கல்லோயாவிலே பெருமளவிலே பாக்கநெல்வேளாண்மை நடத்துவதைக் கையேற்றுநடத்துமாறு பெருமுதல் உடையவர்களையும், நடுத்தரவகுப்புக் குடியேற்றகாரரையும் அழைப்பதற்குத் தீர்மானமாயிருக்கிறது. இதற்கென ஐம்பதினாயிரம் ஏக்கர் மேட்டுநிலம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

# அதிதூதரான அர்ச். மிக்கேல்

“சர்வேசுரனுக்குச் சமானமானவன் யார்? என்று அறைகூவிக்கொண்டு லூசிப்பேரையும், அவனைச்சார்ந்த கெட்ட அரூபிகளையும் நரக பாதாளத்தில் விழத்தள்ளி அவர்கள்மேல் வெற்றிகொண்டவர் அதிதூதரான அர்ச். மிக்கேலே. பூர்வகாலத்தில் யூதமக்களுக்குத் துணையாயிருந்து, அவர்களைப் பலவித சங்கடங்களிலிருந்து பாதுகாத்து வழிகாட்டியவரும், அவர்கள்செய்த யுத்தங்களில் அவர்களுக்குப் பேருதவியாயிருந்து ஜெயத்தை அருளியவரும் அதிதூதரான அர்ச். மிக்கேலே. புதிய ஏற்பாட்டிலும் திருச்சபைக்குப் பாதுகாவலராக நியமகம் பெற்றிருப்பவர் அதிதூதரான அர்ச். மிக்கேலே. அவர் தந்திர சோதனைகளால் நம்மைக் கெடுக்கத்தேடும் பசாசை அகற்ற வல்லமையுடையவர். அந்தியவேளை நமக்கு உதவி செய்ய அரியவரம்பெற்றவர். உத்தரிக்கிற ஸ்தலத்தினின்று ஆத்துமாக்களை மோட்சத்துக்கு அழைத்துச் செல்லுகிறவர். கடைசிகாலத்திலே அந்திக்கிறீஸ்துவுடன் போர் பொருதி அவனை நரகத்தில் தள்ளவிருப்பவரும் அவரே.

மோட்சத்தின் பிரதானியும், திருச்சபையின் பாதுகாவலரும், நரகத்தின் பயங்கரமுமான அர்ச். மிக்கேல்அதிதூதர் தரிசனையான திருநாள் வைகாசி மாதம் 8-ந் திகதியன்று திருச்சபையாலே கொண்டாடப்படுகிறது. இத்தாலியிலே நேப்பிள்ஸ்நகருக்குச் சமீபமாயுள்ள கர்கானோஎனும் மலையடிவாரத்தில் இடையர்கள்சிலர் ஆடுமாடுகளை மேய்த்துக்கொண்டிருந்தனர். அப்போது எருதுஒன்று எங்கேயோ காணமற்போய்விட்டது. எங்குந்தேடியும் அந்த எருது அகப்படவில்லை. கடைசியாக அதுமலைக்குகை ஒன்றில் இருப்பதை அவர்கள்கண்டனர். அக்குகையிலிருந்து அதனை வெளியேற்ற ஆனமட்டும் பிரயாசப்பட்டும் இயலாமற் போய்விட்டது. அதனால் இடையர்களில்ஒருவன் ஆத்திரமுற்றவனாய் அந்தஎருதை அம்பால் எய்தான். ஆனால், எய்தஅம்பு எருதின்மேற்படாமல் அதனை எய்தவன்மேல்பட்டு அவனைக் காயப் படுத்தியது. இதைக் கண்டஇடையர்கள் அதிசயித்து இதுசெய்தியைத் தங்கள்மேற்றிராணியாருக்கு அறிவித்தனர். அவரும்இதைக்கேட்டு ஆச்சரியப்பட்டார். அதன் காரணத்தைச் சர்வேசுரன் தமக்குஅறிவிக்கும்படியாக அவரும், நேப்பிள்ஸ் நகர கிறீஸ்தவர்களும் மூன்று நாள் உபவாசமிருந்து விசேஷ வேண்டுதல்செய்து வந்தார்கள்.

அங்ஙனமாக, மூன்றாம் நாள் அர்ச். மிக்கேல் சம்மனசானவர் மேற்றிராணியாருக்குத் தரிசனமானார். எருது நின்றவிடத்தில் தமதுபேராலும், மற்றும் சம்மனசுகள் பேராலும் ஓர்தேவாலயம் கட்டப்பட வேண்டுமென அறிவித்தருளினார். அவர்அறிவித்தபடியே அவ்விடத்தில் அழகியதோர் தேவாலயம் கட்டியெழுப்பப்படவே, வருடந்தோறும் பெருந்திரளான மக்கள் அங்கு திருயாத்திரை செய்து அர்ச். மிக்கேல் அதிதூதருடையவும்மற்றும்தேவதூதர்களுடையவும் சலிகையினால் அநேகஅனுக்கிரகங்களை அற்புத விதமாகப் பெற்று வருகின்றார்கள். ஆதலால், அர்ச். மிக்கேல் சம்மனசானவர் பெற்றுள்ள மகத்தான வரங்களையும், அவருக்குள்ள வல்லபத்தையும் நன்குணர்ந்து எப்போதும் அவரின்உதவியை நாடுவோமாக! திவ்விய பூசையிலும், மற்றும் வேளைகளிலும் பாவசங்கீர்த்தன மந்திரம்சொல்லும்போது அவரிடமும் சங்கீர்த்தனஞ் செய்கிறோமென்பதை நினைவுகூருவோமாக! பூசைமுடிவிலே “அதிதூதரான அர்ச். மிக்கேலே, யுத்தநாளில் எங்களைத்தற்காரும்” என்ற அருமையான செபத்தைப் பக்தியுருக்கமாகச் சொல்லப் பழகிக்கொள்வோமாக.

## குணமடைந்த பெண்பிள்ளை

“தனது இருகால்களினதும் பாவனையைப் பதினைந்துவாரமாக இழந்துபோயிருந்த பதினைந்துவயதுள்ள ஓர் பாடசாலைமாணவி ஓர் புராதன ஆங்கிலயாத்திரைப்பதியாகிய உவால்சிங்காம்மாதாவின் றோமான்கத்தோலிக்க திருசேத்திரத்தைத்தரிசித்தபின் இன்று நடக்கின்றா”ளென 27-ந்திகதியன்று அங்கிருந்து தந்திச்சமாச்சாரம் கிடைத்திருக்கிறது. “யோக்ஷயரிலே ஸ்கார்பறோ எனுமிடத்தைச்சேர்ந்த பிறெடா பொக்மோர் என்ற இப்பெண்பிள்ளை அங்கு சிலிப்பர் சிற்றாலயமென அழைக்கப்படுவதாகிய அர்ச். கத்தறீன் சிற்றாலயத்தில் திவ்வியபூசை கண்டு நோயாளருக்கான செபங்கள் முடிந்தபின் தான் குணமடைந்ததாகக் கூறுகிறாள்; 1061-ம் ஆண்டு மேனர்சீமாட்டி கண்ட காட்சியின்பின் இத்திருசேத்திரம் அடியிடப்பட்டாயிற்று” என்று தந்திச்சமாச்சாரம் தெரிவிக்கின்றது.

## மேமாதம் தாய்மாதம்

I

மே மாதம் வந்ததம்மா!
சேயர்நாம் ஒன்றுசேர்ந்து
தாய்மாதம் வந்ததெனத்
சந்தோஷம் கூருவோமே

II

தேவமரி யன்னையாளின்
திங்கள்இது என்றுதினம்
ஆவலுடன் பாதமலர்
அண்டித்துதி சாற்றுவமே

III

அன்னைமரி கன்னிகையே!
அமலபரன் தாயாரே!
என்னையுமே காத்துஎன்றும்
இன்பகதி சேர்த்தருள்வாய்

“மன்றுடி வம்ஸன்”

எங்களுடைய பாத்திமாகிரியை நேசிப்போர்க்கு

# ஓர்சிறு கடிதம்




அன்பர்களே! முந்திய மூன்று கிழமைகளிலும் வைகாசி 13-ந் திகதிக்கென்று சிலவிஷயங்களைப் “பாதுகாவலன்” பத்திரிகையில் வெளியிடலானேம். வருகிற புதன் கிழமைதான் இந்தத்திருநாள் என்பதை எல்லோரும் அறிவீர்கள். அதற்குமுன் வருகிற 10-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை முதல் வண. எல். ஜே. அகஸ்ரீன் சுவாமியவர்கள் ஓர் ஞான ஒடுக்கம் போதிக்கத்தொடங்குவார். இந்தமூன்றுதினங்களிலும் அவர் திவ்வியபூசை, ஆசீர்வாதநேரங்களிலே உங்களது ஞானநன்மைக்காகப் பிரசங்கஞ் செய்வார். 12-ந் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 7 மணிக்குத் திவ்விய சற்பிரசாத எழுந்தேற்றஞ் செய்து அதன்முன்பாக முழுச்செபமாலையும் ஞானபோதகங்களோடும், சங்கீதங்களோடும் செபிக்கப்படும். ஈற்றில் 13-ந் திகதி பிறக்கும்வேளை மகாவந். மேற்றிராணியாண்டவரால் சாமப்பூசை நிறைவேறும். அம் மூன்றுதினங்களிலும் பாவசங்கீர்த்தனஞ்செய்ய வசதியளிக்கப்படும். விசேஷமாகச் செவ்வாய்க்கிழமைபிற்பகல் சாமப்பூசைக்கு முன் குருமார்பலர் இதற்கென்று சமூகமாயிருப்பார்கள்.

இவ்விதமாகச் சகலரும் ஆன்மநன்மைகளை அடைந்து கொள்வதற்கான வசதியருளப்படும். ஆனால், இங்கு சரீரவசதிகளை எவரும் அவ்வளவாக எதிர்பார்க்கமுடியாது. பாத்திமாகிரி யாத்திரை ஓர்தபத்திற்குரிய யாத்திரையெனச் சிந்திக்கவேண்டும். அன்றிரவு நித்திரைசெய்யாது விழித்திருந்து ஆராதனைகளில்பங்குபற்றுவதும் ஓர்தபக்கிரியையாகும். உணவுவகையோ, வேறுசாமான்களோ வாங்கிக்கொள்ள இங்கு கடைகள் இல்லை. பாத்திமாகிரிவீதி இன்னும்திருத்தப்படாமையால் இராமுழுவதும் வடலிகளின்மத்தியிலேயே தங்கவேண்டும். இந்தவசதியீனங்களைப் பறுவாய்பண்ணாது அன்றிரவு உங்கள்எல்லோரது செபமும் தேவசிம்மாசனமட்டும் ஓர்தூபம்போல் எழும்புவதாக!

1917-ம் ஆண்டு மூன்றுபிள்ளைகள் கோவாடீறியாவில் தேவமாதாவைத் தரிசித்தார்கள். பின்னர் சொற்பகாலத்துள் பிரான்சீசும், யசிந்தாவும் அதிகபாடுபட்டு மரித்தார்கள். இப்போது உலகில் எங்களுடன் லூசியாமாத்திரம் கார்மேல்மடத்தில் மறைந்துஇருக்கிறாள். 13-ந் திகதிவரும்போது நாம் அவளுடைய செபத்தின் இரகசியத்தை அறியமாட்டோம். ஆனால், நிச்சயமாக அவள் தனக்குத் தேவமாதாசெய்த நன்மைகளுக்காக முழு இருதயத்தோடும் நன்றிசெலுத்துவாள். இன்னும்அவள் உலக சமாதானத்துக்காகவும், பாவிகளின் மனந்திரும்புதலுக்காகவும் மன்றாடுவாள். நாங்களும் அந்தஇரவிலே அவளைக் கொஞ்சம் நினைவுகூர்ந்து அவளைப்போல மன்றாடுவோமாக!

Henri Gesland, O. M. I.
கட்டளைக்குரவர்

## வாழ்த்துவோம்

வாழ்த்துவோம் வாழ்த்துவோமே — எம்தாயை
வாழ்த்தி வணங்கு வோமே

1. கன்னி மரிதாயை — எமைநிதம்
காத்திடும் அன்னையரை
பண்ணிசை கொண்டுஅன்பாய்ப் — புகழ்ந்துமே
பாடிக் களித்திடுவோம்

2. பாவிக் கடைக்கலமாம் — அவள்திருப்
பாதம் கடைப்பிடிப்போம்
பாவிகள் தஞ்சமென்றே — தினமுமே
பத்தியாய் வேண்டிடுவோம்

3. அற்பமும் குற்றமிலாள் — உலகில்ஓர்
அற்புத உற்பவமே
பொற்பதம் நாடிஎன்றும் — பூரித்தே
போற்றி வணங்கிடுவோம்

வேம்பார் ‘ஆகு’

## வைகாசி மாதம்

போதுக்கருத்து :- சினிமாப்படக் காட்சிகளினுல் விசுவாசத்திற்கும், ஒழுக்கத்திற்கும் ஏற்படும்அபாயங்கள் நீங்கும்படியாக வேண்டிக்கொள்வது.

மிஷன்கருத்து :- வட இந்தியாவிலே திருச்சபை செழித்துவளரும்படியாக மன்ருடிக்கொள்வது.

## திருநாள் அட்டவணை

**வைகாசிமாதம்—1953**

| | | | |
|---|---|---|---|
| வெ | 8 | அதிதூதரான அ: மிக்கேல் தரிசனையான திருநாள் | (வெ) |
| சனி | 9 | அ. கிறகோரிநசியாஞ் செனுர், மே. | (வெ) |
| ஞா | 10 | கர்த்தர் உத்தானத்தின் பின் 5-ம் ஞாயிறு — அ. அந்தோனீனு, மே. | (வெ) |
| திங் | 11 | இரக்கத்தின்மாதா திரு. | (வெ) |
| செ | 12 | அ. நெரேயார், வே. | (சி) |
| புத | 13 | அ. றெபேட் பெலாமினுர், வே. | (வெ) |
| வி | 14 | கர்த்தரின் ஆரோகணம் (கடன் திருநாள்) | (வெ) |

சத்தியவேத

# பாதுகாவலன்

1953-ம் ஆண்டு

வைகாசி மாதம் 7-ந் திகதி

## சமாதான தந்திரம்

ருஷிய சர்வாதிகாரியான தோழர்ஸ்ராலின் காலகதியடைந்தபின் அவரிடமாக அதிகாரபதவி வகித்த ஜோர்ஜ் மலன்கவ் என்பவரும், அவர் சகாக்களும் அகில உலகமும் அதிசயிக்கும்படியாகப் பெருஞ் சமாதான முழக்கமெல்லாம் செய்தார்கள். அதனை உலகம் நம்பும்படியாகக் குற்றத்தை ஒப்புக்கொண்டார்களென்று தண்டனைவிதித்துச் சிறைவைத்திருந்தபதினைந்துடக்றர்மாரையும் நிரபராதிகளென்று விடுதலை செய்தனர். பிறநாட்டுக்கைதிகள் சிலரைவிடுதலை செய்வித்தனர் அமெரிக்க பத்திரிகைநிருபர்கள் சிலர் ருஷியாவைத் தரிசிக்க அனுமதியளித்தனர். இந்தவிபரீத செயல்களாலே அவர்கள் உலகத்தை அணைப்பிச் சுயகருமம்பார்க்கச் செய்ததந்திரமெல்லாம் பையமெல்ல அம்பலமாகிக்கொண்டு வருகிறது. பிறவிக்குணத்தைப் பேய்க்கிட்டுக் கழித்தாலும் போகாது என்பதை நன்கறிந்த பிரித்தானிய, அமெரிக்க, பிராஞ்சியஇராசதந்திரிகள் புதியசோவியற்தலைவர்களின் நவீனபோக்கில் மருண்டுவிடாது பழையபடியே தங்கள் பாதுகாப்புவேலைகளில் விழிப்பாயிருந்து வருகின்ருர்கள். சோவியற் தலைவர்களிடையே உண்மையான மனமாற்றம் ஏற்பட்டுள்ளதென்பதை நிச்சயமாக அறிந்துகொள்ளுகிறவரையிலே என்றும்போலத் தயார்செய்துவருகிறதுதானென்ற மனப்பான்மையையே கடைப்பிடித்திருக்கின்ருர்கள். சமீபத்திலே அத்திலாந்திக் ஒப்பந்தநாடுகளின் பிரதிநிதிகள்பரீஸ்நகரில் மகாநாடுகூடியபோது, "ஸ்ராலினுடைய மரணத்துக்குப்பின் சோவியற்ருஷியா தெரிவித்துவரும் சமாதானகோரிக்கைகள் அதன்தந்திரத்தில்ஏற்பட்டுள்ள மாறுதலையே குறிக்கின்றன; உலகஆதிக்கம் பெறவேண்டுமென்ற அடிப்படையான கம்யூனிஸ்தலட்சியம் மாறவில்லை" எனத் தெளிவாக எடுத்துக்கூறியிருக்கின்ருர்கள்.

சோவியற்அரசின் தலைவர்கள் உள்ளபடியே மனமாற்றம் கொண்டிருந்தால்—நன்மனங் கொண்டால்கோறியயுத்தத்தை இலகுவில் நிறுத்திவிடலாம். அங்குவிரைவிலே சமாதானமுண்டாக வழிபண்ணலாம். திரும்பவும் தொடக்கிநடாத்தப்பட்டுவரும் கோறிய யுத்தசமாதானப் பேச்சுவார்த்தையே "பழையகுருடி கதவைத்திறவடி" என்பதுபோன்ற அவர்களின்மாற்றமில்லா மனப்பான்மைக்கும், நன்மனங்காட்டாத பாங்கிற்கும் போந்தசான்ருகும். ஐக்கிய நாடுகளின் பிரதிநிதிகளுக்கும், கம்யூனிஸ்த பிரதிநிதிகளுக்குமிடையே இதுவரைநடைபெற்றுள்ள சமரசபேச்சுவார்த்தையை ஆராய்வாக நோக்குமிடத்து, கோறியயுத்தத்தை ஓர் முடிபுக்குக் கொண்டுவரவிரும்புதற்கான அறிகுறிஎதனையும் கம்யூனிஸ்தர்கள் காண்பிப்போராயில்லை. ஆனுல், முன்போலப் பயனற்றநெடியபேச்சளவிலேயே அதனைமுடிவுக்குக் கொண்டுவரத் தயாராயிருப்பவர்களாகத் தங்களைக் காட்டிக்கொள்ளுகின்ருர்கள். அதனுல், உண்மையிலேயே அவர்கள் கோறிய யுத்தநிறுத்தத்தை விரும்புகிருர்களென்று சொல்வதற்கிடமில்லை. அங்குயுத்தநிறுத்தம் ஏற்படுமிடத்துத் தங்கள்வீடுகளுக்குச்செல்ல மனமில்லாத கம்யூனிஸ்த யுத்தகைதிகளைப் பொறுப்பேற்கப் பாகிஸ்தான் தெரியப்படவேண்டுமென்ற யோசனைக்கும் அவர்கள் செவிசாய்ப்போராயில்லை. இவற்றிலுள்ள சூட்சத்தை அறிந்துபோலும் "இந்தோசீனவிலே கம்யூனிஸ்தர்கள் தற்போது மும்முரமாகநடத்தத் தொடங்கியிருக்கும் யுத்தத்தில் அவர்கள் தீர்க்கமான முன்னேற்றம் அடைகிறவரையில் யுத்தநிறுத்தப்பேச்சுகளைத் தாமதப்படுத்திக்கொண்டு வருகிருர்கள்; உலகமுழுவதையும் கம்யூனிஸ்த ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவரவேண்டுமென்ற அடிப்படையான கொள்கையைச் சோவியற்அரசு கைவிடவில்லை"யென்று அமெரிக்க இராசதந்திரி ஒருவர் கூறுகின்ருர்.

"சோவியற்அரசும், செஞ்சீனவும் தற்சமையம விடுத்துள்ள சமாதான கோரிக்கைகள் வெறும்பகட்டானவையெனக் கொள்ளாது உண்மையானவையேயென்று சுதந்திரஉலகம் எடுத்துக்கொள்ளுமானுல், அது பெரும் அபாயத்துக்கேதுவான ஓர்பிழையைச் செய்வதாகும்; ஓர்புதிய பவளத்துறை அபாயமும், ஓர்மூன்ருவது யுத்தஅபாயமும் கடந்த சிலவருடங்களில் எப்போதாவது இருந்ததைக் காட்டிலும் தற்போது மிகமோசமாயிருக்கின்றன; ருஷியாவிலே சர்வாதிகாரஆட்சி நடாத்துகிறவர்கள் மனம்மாறிக்கொண்டுவருகிருர்களென்று நினைப்பது முற்றுமே தவருனதும், மிதமிஞ்சித் தகாதவிதமாக நம்பிக்கைகொள்வதுமாகும்" என்று நியூயோக்நகரின் துணைமேற்றிராணியாரும், பிரசங்கபீடங்களிலும் ரெலிவிஷனிலும் பிரசங்கஞ் செய்வதிலே பிரஸ்தாபம்பெற்றவருமான புல்ரன் ஷீன்ஆண்டவர் கூறுகின்ருர். மேலும்அவர் பேசியவிடத்து: கம்யூனிஸ்த கொள்கைக்குப்பதில் அதன் வெளிநாட்டுக் கொள்கையைக் கொண்டு சோவியற்அரசின் போக்கை நிர்ணயிப்பதாகிய பிழையைப் பிரித்தானிய, அமெரிக்க, பிரான்சியஅரசுகள் மற்றுமோர்தரம் செய்கிறதாயிருந்தால் அவைகள் சமாதானத்திற்குரிய சந்தர்ப்பங்களைப் பெரும் அபாயத்திற்குள்ளாக்குமென்றே நாம் சந்தேகமின்றி நம்புகிருே"மென்றும் கூறியிருக்கின்ருர். கம்யூனிஸம் என்பது சுதந்திர வாழ்விற்குச்சத்துருவும், அடிமைவாழ்விற்கு ஆஸ்பதமுமாகும். அதனுல் சோவியற்அரசு கம்யூனிஸத்தைக் கடைப்பிடிக்கிறவரையிலே அதன் சமாதான பேச்செல்லாம் விழற்கூச்சலே என்க.

கர்த்தர் உத்தானத்தின்பின்

## 5-ம் ஞாயிறு

### சுவிசேஷ வாசிப்பு

(யுவா. 16 : 23—30)

அர்ச். யுவானியார் எழுதிவைத்தபடி பரிசுத்தசுவிசேஷத்தின் தொடர்ச்சி:— அந்தக் காலத்திலே யேசுநாதர் தம்முடைய சீஷர்களுக்குத் திருவுளம பற்றினது: என் நாமத்தினுலே நீங்கள் பிதாவிடத்தில் ஏதாவது கேட்பீர்களாகில், அதை அவர் உங்களுக்குத் தந்தருளுவார் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். இதுவரைக்கும் நீங்கள் என் நாமத்தினுல் ஒன்றையுங்கேட்கவில்லை. கேளுங்கள்; உங்கள் சந்தோஷம் பூரணமாகும் பொருட்டுப் பெற்றுக்கொள்வீர்கள். இவைகளை உங்களுக்கு உவமைகளால் சொன்னேன். இதோ! காலம் வருகிறது; இனி உவமைகளால் பேசாமல், வெளிப்படையாய்ப் பிதாவின் காரியங்களை உங்களுக்குத் தெரிவிப்பேன். அந்த நாளிலே என்நாமத்தினுல் விண்ணப்பஞ் செய்வீர்கள். ஆயினும், உங்களைப்பற்றி நான் பிதாவை மன்ருடுவேன் என்று உங்களுக்குச் சொல்லுகிறதில்லை. ஏனெனில், நீங்கள் என்னைச் சிநேகித்து, நான் சருவேசுரனிடத்தினின்று புறப்பட்டேன் என்று விசுவசித்திருக்கிற படியால் பிதாதாமே உங்களைச் சிநேகிக்கிருர். நான்பிதாவிடத்திலிருந்து புறப்பட்டு இவ்வுலகத்துக்கு வந்தேன். மீண்டும் உலகத்தைவிட்டுப் பிதாவிடத்திற்குப் போகிறேன்என்ருர். அப்பொழுது அவருடைய சீஷர்கள் அவரைநோக்கி: இதோ! இப்பொழுது வெளிப்படையாய்ப் பேசுகிறீர்; உவமை ஒன்றுஞ் சொல்லுகிறதில்லை. உமக்குஎல்லாம் தெரியும்என்றும், ஒருவனும் உம்மை வினவ வேண்டுவதில்லையென்றும் இப்பொழுது அறிந்திருக்கிருேம். இதின்நிமித்தமேதேவரீர் சருவேசுரனிடத்திலிருந்து வந்திருக்கிறீரென்று விசுவசிக்கிருேம் என்ருர்கள்.

கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக.

## தேவதாய் நமதுதாய்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னும் பட்டத்திற்கு இவ்வுலகில் இணையுண்டோ? இந்தமரியன்னை பரலோக பூலோக இராக்கினி. சகலவரப்பிரசாதங்களினதும் ஊறணி. கன்னியர்க்கரசி. அர்ச்சியசிஷ்டர்களுள்ளும் மேலான அர்ச்சியசிஷ்டவள். கிறீஸ்துவர்களின் சகாயம். பாவிகளின் தஞ்சம். சுருங்கக்கூறின் அன்னைமரி தேவனின் அதிஉந்நத சிருஷ்டி. தேவனுக்கு மிகவும் பிரியமானவள். பெண்களுக்குள் பாக்கியம் பெற்றவள். அவளே நமது நேசதாய். பெற்றதாயினும பன்மடங்கு அன்புடன் நம்மை நேசிக்கும்தாய். என்னே, நமது பாக்கியம்! இந்தநினைவு நம்மைப் பூரிக்கச் செய்கிறதல்லவா?

அன்னையே, அம்மா என்றழைப்பது எவ்விதம் குழந்தைகளின் இன்பமோ, அவ்விதம் மரியே என்றழைப்பது மனுக்குலத்தின் இன்பமாகும். தாயே! உம்மாலன்ருே எங்கள்சாபம் நீங்கியது! உம்மாலன்ருே மனுக்குலம் தேவஆசீர்வாதம் பெற்றுஉய்ந்தது! ஆகவே, எங்கள் சந்தோஷத்தின் காரணம் நீரன்ருே! அன்னையே, தேவனின் தாயாகியநீரே எங்கள் தாயாகவும் இருக்கிறீர் என்று நினைக்குந்தோறும் நாங்கள் கொள்ளும் ஆனந்தத்திற்கும் ஓர் அளவுண்டோ? அம்மணீ, இதோ உம்மைநம்பி உமது அடைக்கலத்தைநாடி ஓடிவருகிருேம். எம்மைஏற்றுப் பாதுகாத்து எமது நித்தியசந்தோஷத்தின் காரணமாயிரும் தாயே.

### வெங்காய ஏற்றுமதி விலக்கு

இம்மாதம் 4-ந்திகதி திங்கட்கிழமை முதல் வடபகுதியிலிருந்து வவுனியாப் பட்டினத்துக்கும், வவுனியாப்பட்டினத்தின் தென்பகுதிக்கும் ஈரவெங்காயம் ஏற்றுமதிசெய்வது விலக்கப்பட்டிருக்கிறது. அதனுல் வடபகுதிக்கும், தென்பகுதிக்கும் பிரயாணஞ்செய்யும் ரதங்களும், பிரயாணஞ்செய்கிறவர்களும் உணவுக்கட்டுப்பாட்டு ஒழுங்குச்சட்டத்தின்படி வவுனியாப் பட்டினத்துக்கு வடக்கே அமைக்கப்பட்டிருக்கும் தடைநிலையத்தில் பரிசோதனைசெய்யப்படவேண்டியநிலைமை ஏற்பட்டுள்ளது.

## நேர்த்தியின் பூர்த்தி

தயாளம்நிறைந்த யேசுவின் பரிசுத்த இருதயத்தின் இரக்கத்தாலும், சதாசகாய மாதா, சந்தானுள்நாயகி, அர்ச். அந்தோனியார், மற்றும் அர்ச்சியசிஷ்டர்களின் மன்ருட்டத்தினுலும் நான் இரண்டுவருடமாகக் கேட்டவிண்ணப்பம் அனுகூலமானது. இவர்களின் திருநாமங்கள் புகழப்படுவனவாக!

யாழ்ப்பாணம் S. S.



சதா சகாய மாதாவின் கோணம்

# குருமகனின் நன்றித்துதி

[முன்தொடர்ச்சி]

"உங்கள்மகன் மாணத்துக்கு மூந்தியநாள் திவ்வியநன்மை பெற்ருர்" என்று பட்டாளத்தைச்சேர்ந்த குருவானவர் ஒருவர் சிலநாட்களின்பின் எழுதியிருந்தார்.

தேவதாயார் திவ்வியநற்கருணைநாதரின்பக்கமாக ஆத்துமாக்களை இழுக்கிருர் என்பது எவ்வளவு உண்மை! இந்தஉண்மை லூர்துபதியிலும், பாத்திமாவிலும், தேவதாயாரின் ஒவ்வொரு யாத்திரைத்தலத்திலுமே எண்பிக்கப்படுகின்றதென்பது எல்லோரும் அறிந்ததே. தேவதாய்பத்தி யேசுவின்பத்தி—தேவதாயை நேசித்துச்சேவிக்கிற எவரும் யேசுவை நேசித்துச் சேவியாதிருக்கமுடியாது.

இக்கதையின் அரங்கம் ரோமாபுரிக்குமாறுகின்றது—நான் குருத்துவ அபிஷேகம் பெறுவதற்கு ஒரு கிழமைக்குமுன் என்தாயார் ரோமாபுரிக்குவந்தா. நான் அவரைப் புகையிரதஸ்தானத்தில் சந்தித்து ஒருசிறு வெகுமதி கொடுத்தேன். திருமீட்பர் சபைக்குருமாரின் தாய்மடத்தில், சதா சகாயமாதாபத்திக்குத் தாயகமாய் விளங்கும் ரோமாபுரியில் என்தாயாருக்கென நான்பெற்றுக்கொண்ட சதா சகாயமாதாவின் படந்தான் இந்த வெகுமதியாகும். இதைவிட அவவுக்கு அதிகஉகப்பான வெகுமதி வேறொன்று இருக்குமென நான்நம்பவில்லை.

எனது முதலாவது திவ்வியபூசைப் பலியை அர்ச். இஞ்ஞாசியார் ஆலயத்திலும், இரண்டாவதுபூசைப்பலியைச் சதாசகாயமாதா சேத்திரத்திலும் ஒப்புக்கொடுக்கும்பாக்கியம் எனக்குக் கிடைத்தது. இதுநிகழ்ந்து சரியாய் மூன்று கிழமைகளின்பின் திடீரென லண்டன் பட்டணத்திலிருந்து எனக்கு ஒருதந்திகிடைத்தது. "தகப்பனுருக்கு வருத்தம்மிகக்கடுமை. உடனே வரமுடியுமா—தாயார்" இதுதான் தந்தி.

என் தகப்பனுர் ஓர் கத்தோலிக்கர் அல்ல. அவரின்சீவியகாலம் குறுகிவிட்டது. மாணவேளை கிட்டிவிட்டது. அவர் என்னை மூன்ருண்டுகளாகக் காணவில்லை. அவர் பேசப்பறையமிகக்கஷ்டமான நிலையிலிருந்தார். நித்தியத்தின் விஷயங்களைப்பற்றிக் கதைத்தல் சாத்தியமான காரியமாகுமா? என்னசொல்லவேண்டும்? எப்படிச்சொல்லவேண்டும்? என்மனம் துக்கத்தாலும், அங்கலாய்ப்பாலும் பதகளித்துக்கொண்டிருந்தது. இதுதான் என்முதலாவது "அவஸ்தை அழைத்தல்." அதுவும் ரோமாபுரியிலிருந்து நோயும்பாயுமாய்க் கிடந்த என் தகப்பனுர் அண்டைக்கு!

அறையில் சதாசகாயமாதாவின் படமிருந்தது. சிறியவிளக்கு படத்துக்கு முன்ஞல் எரிந்துகொண்டிருந்தது. இந்தப்படம் இங்கே இந்தவேளை இருக்குமென்றவிஷயம் என்மனதில் பட்டதேயில்லை. ஆனல், தேவதாயார் தமது சகாயத்தைக்காட்டத் தீர்மானித்துவிட்டார். என் தகப்பனுரின் கட்டிலண்டை மணித்தியாலக்கணக்காகச் செலவழித்தேன். அந்த நேரமெல்லாம் நித்தியத்துக்கும் உமதுசகாயத்தைக்காட்டி எங்கள்சகாயமாயிரும் என்று அவவைப்பார்த்து மன்ருடிக்கொண்டேயிருந்தேன்.

தேவதிரவிய அனுமானங்களை வழங்குமுன் ஒருகுருவானவர் கேட்கவேண்டிய கேள்விகளை நான் என் தகப்பனுரிடம் சரியானமுறையில், சரியான வேளையில் எப்படித்தொடங்குவது? எப்படிமுடிப்பது? என்று ஆலோசித்தேன். "என்நல்லதாயாரே! என்னை எப்போதும் வழிநடத்தியதுபோல இப்போதும் வழிநடத்தியருளும்; எப்போதும் எனக்கு ஒத்தாசையாக இருந்ததுபோல இப்போதும் ஒத்தாசையாயிருந்தருளும்..." என்று என்னுலான பத்திவேகமெல்லாங் கூட்டி மெத்தஉருக்கமாய் வேண்டிக்கொண்டேன். படம் அறையில் இருந்தது. பூமிஅதிர்ச்சியும் இல்லை. யுத்தமுழக்கமும் இல்லை. செபமாலையை மிணுமிணுஎன்று ஓதும் ஓசைமாத்திரம் அறையில் கேட்டது. மாணத்துக்குச் சிலநாட்களின்முன் என் தகப்பனைக் கத்தோலிக்கதிருச்சபையிற் சேர்க்கும் பாக்கியம் பெற்றேன். என் ருருத்துவத்தைச் சதாசகாயமாதாவின் பாதுகாப்பில் ஒப்படைத்தேன். ஆண்டவர் பக்கம் அநேகஆத்துமாக்களை இழுக்க உதவிசெய்யும்படி அன்றும்இன்றும் அவவிடம்மன்ருடிவருகிறேன்.

புத்தக மதிப்புரை

## உரைநடை விருந்து

பிரசுரம் — சுன்னுகம்: வட-இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம். விலை ரூபா 1-50.

சுன்னுகம், வட—இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகத்தார் தொகுத்து வெளியிட்டுள்ள "உரைநடைவிருந்து" என்னும் அழகியநாமம்புனைந்த இந்நூலிலே பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை, சுத்தானந்த பாரதியார், பண்டிதர் சி. கணபதிப்பிள்ளை, திரு. பொ. திருகூடசுந்தரம், திரு. சு. நடேசபிள்ளை சுவாமி விபுலானந்தர், வித்துவான்—பண்டிதர் கா. பொ. இரத்தினம் முதலாம் அறிஞர்கள், பேராசிரியர்களால் அவ்வப்போது எழுதப்பட்ட அருமையான பத்துக்கட்டுரைகள் தொகுக்கப்பட்டுள்ளன. 1. ஈழநாடும் தமிழரும் 2. ஊரைக்காத்த பாட்டி 3. இரண்டு மனுஷர்கள் 4–5 சிந்தனைசக்திப்பயிற்சி 6. இலங்கை ஆற்றுப்படை 7. எனது யப்பான்யாத்திரை 8. இமயஞ்சேர்ந்த காக்கை 9. கம்பர் காட்டும்பெண்கள் 10. யூலியஸ்சீசர் எனும் தலையங்கங்களைக்கொண்ட இந்தக்கட்டுரைகள் ஒவ்வொன்றும் கவர்ச்சிகரமாயும், பொருட்சுவை, சொற்சுவைபொருந்தியனவாயும் அமைந்துள்ளன. விருந்துணவில் பல்வேறு சுவையமைந்த உணவுப்பொருள்கள் ஒருங்குசேர்ந்து விருந்தின் சுவையை மிகுவித்தல்போல பலவிதகட்டுரைச் சுவையமைந்த கட்டுரைகள்சேர்ந்து "உரைநடைவிருந்து" என்னும் இத்தொகுப்பு நூலின் சுவையை மிகுவிப்பது பாராட்டத்தக்கதே. பல்வேறு சம்பவங்களும், இலக்கியம், இதிகாசம், பிரயாணம், விஞ்ஞானம், ஆராய்ச்சி, கலாசாரம், கதை சம்பந்தமானவைகளும் அமைந்துள்ளனவாதலின் இக்கட்டுரைகள் மாணவர்களுக்குக் கட்டுரை எழுதும் ஆற்றலை அளிக்கவல்லன. இன்னும் தமிழ்அறிஞர்களது வாழ்வின் உயர்ந்த தன்மை, தமிழ்மக்களது வாழ்க்கைச் சிறப்பு, மனிதன் சிந்திக்கவேண்டிய தன் அவசியம், சிந்திப்பின்பயனுய் உலகடைந்தமுன்னேற்றம், இன்றைய தமிழ்மக்கள் மறந்துவிட்ட அண்மைக்கால யாழ்ப்பாணத் தமிழ் அறிஞர்களின் சேவைஎன்பனவற்றை அறிந்துகொள்ள மாணவர்களுக்கு அரியதோர் சந்தர்ப்பத்தையும் இந்நூல்அளிப்பதாகின்றது. அதனுல் அவர்களுக்கெல்லாம் இஃதோர் நல்லவிருந்தாகும். எஸ். எஸ். சி., எச். எஸ். சி. வகுப்பு மாணவர்கள் பாடபுத்தகமாக உபயோகித்தற்கும் இந்நூல் மிகவும்பொருத்தமானதே. நமக்கு அனுப்பிய பிரதிகளுக்காக நன்றிகூறுகின்றேம்.

செம்பியன்பற்று

# அர்ச். பிலிப்புநேரியார் திருநாள்

இத்திருநாள் வழமைப்பிரகாரம் இம்மாசம் 17-ந் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நவதின உற்சவங்களுடனும், 26-ந் திகதி பிற்பகல் அன்னதானத்துடனும் முடிவுபெறும்.

திருநாள் வைபவ விபரம்

(1) 25-ந் திகதி வேஸ்பர்
26-ந் திகதி காலை 6-00 மணிக்குப் பெரியபாடற்பூசை.
26-ந் திகதி காலை 7-30 மணிக்குச் சுற்றுப்பிரகாரம்.
26-ந் திகதி மாலை 7-00 மணிக்கு அன்னதானம்.

(2) பாவசங்கீர்த்தனம் கேட்பதற்குக் குருமார் சமுகமாயிருப்பார்கள்.

செம்பியன்பற்று
5-5-53

கட்டளைக்குரவர்

சில்லாலைப்

## புதிய குருப்பிரசாதி

சில்லாலையில் உதித்தவரும், மரியநாயகி பரித்தியாகிகளில் ஒருவரும், ரோமாபுரியில் வேதசாஸ்திரங்கற்றுக் குருபதவி பெற்றவருமான வண. எம். பாவிலுப்பிள்ளை சுவாமியவர்கள் 21-4-53 செவ்வாய்க்கிழமை தமது சுய நாடாகிய யாழ்ப்பாணத்திக்குத் திரும்பிவந்து, தம்முடையதாயகமாகிய சில்லாலையில் சென்ற 2-5-53 சனிக்கிழமை தமதுமுதற்பூசையை நிறைவேற்றினர். இக்குரவர் சில்லாலைப் பிரபலகுடும்பமொன்றில்பிறந்து, அங்குள்ள தமிழ்ப்பாடசாலையில் ஆரம்ப கல்விகளைமுடித்து, மூந்தமாதகல் சஞ்சுசையப்பர் ஆங்கிலகலாசாலையிலும், பிந்தச் சம்பத்திரிசியார் கல்லூரியிலும் ஆங்கில கல்விகற்று, சென்மாட்டின்குருமடத்தில் இருந்துவருபோது லண்டன் சர்வகலாசாலையின் பி. ஏ. பட்டதாரியாயினர். பின்னர் ஒருவருடகாலம் கொழும்பிலே குருத்துவகல்வி கற்ற இவர் ரோமாபுரிக்கு அனுப்பப்பட்டு, 1952-ம்ஆண்டு ஆடிமாசம் 6-ந் திகதி குருத்துவாபிஷேகஞ் செய்யப்பெற்ருர்.

சுவாமியவர்கள் முன்னெருகாலம் யாழ்ப்பாணத்திலே பிரஸ்தபமுற்றிருந்த கனகசூரிய முதலியின் பாம்பரையினராய், வேதவிசுவாசங்காரணமாய்ச் சில்லாலையைத் தம்பதியாகக்கொண்டு இவ்வூரில்விளங்கியமூப்புப்பிறஞ்சர்வழியிலே காலஞ்சென்றஅதிவண. பி. எம். பிரான்சீஸ்குரவர்க்கடுத்துவந்த இரண்டாவது குருப்பிரசாதியாவர். சில்லாலையின் பத்தாவதுகுருப்பிரசாதியான இவர் மாதகல் கநதகுலோத்துங்க முதலி பரம்பரையிலுதித்த பிரபலவைத்தியர் ஸ்ரீ இன்னுசித்தம்பி அவர்க்ள்வழி முதற்குருப்பிரசாதியாவர். அதேபரம்பரையிலுதித்த பிரபலவைத்தியர் சின்னப்பா அந்தாம்பிள்ளையவர்கள் வழி மூன்ரும்குருப்பிரசாதியாவர்.

சில்லாலையிலேஇவர் செபஸ்தியாம்பிள்ளை மரியாம்பிள்ளை அவர்களின்பத்துப் புதல்வர்புதல்விகளில் ஆருவதுபிள்ளையாவர். இன்றுசில்லாலைக்கிராமமுன்னேற்றசங்க காரியதரிசியாயும், பண்டத்தெருப்பு ஐக்கியவிவசாய விளைபொருள் உற்பத்தி—விற்பனவுச்சங்கத்தின் காரியதரிசியாயும் கடமைபார்த்துவருபவர் இவரின் ஓர்தமையனுராவார். சில்லாலைநல்லாயன் சனசமூகநிலையத்தின் தலைவராயும், சில்லாலைவாலிபர் இயக்கத்தின் தலைவராகவும் விளங்குபவர் இவாதுதம்பிமாரில் ஒருவராவர். சில்லாலை மாதர்இயக்கத்தின் முதற் தலைவியாயிருந்து அவ்வியக்கம் யாவர் கவனத்துக்குமுரிய நிலையில்வா அடிகோலிய காலஞ்சென்ற ஸ்ரீமதி விக்ரோறியா மரியாம்பிள்ளை இவாதுசகோதரிகளில் ஒருவராவர். காம்பன் கட்டளைக் குரவராய் இருந்துவரும் வண. ஏ. எஸ். சிங்கராயர்சுவாமியவர்கள் இவர் தாய் மாமனுவர்.

இக்குரவர் இன்று மேல்நாட்டுச் சுகாத்தியங் காரணமாய் அசௌக்கிய



வண. எஸ். ஏ. பெஞ்சமின் சுவாமியவர்களின்

## 15-ம் வருட மரண ஞாபகம்

சர்வவல்லப பிதாவே!

உமதுதிருக்குமாரன் எங்களுக்காகச்சிந்திய திரு இரத்தத்தையும், அவர்திருத்தாயார் அனுபவித்த சொல்லில் அடங்காத வியாகுலத்தையும், சிலுவையின் பேறுபலன்களையடைந்த சகல அர்ச்சியசிஷ்டர்களுடைய வேண்டுதலையும்குறித்து உமதுஅடியாகிய பெஞ்சமின் சுவாமியவர்களது ஆத்துமத்தின்பேரில் கிருபைவைத்தருளவேண்டுமென்று உம்மைஇரந்து மன்ருடுகிறோம்.

இதைக்கண்ணுறும் வண. குருப்பிரசாதிகள், சந்நியாசிகள், கன்னியாஸ்திரிமார், மற்றும் அவரிடமிருந்து ஆன்மலாபம் அடைந்தவர்கள் இம்மாசம 13-ந் திகதி (13-5-53) புதன் கிழமை அவரின் ஆன்மஇளைப்பாற்றிக்காக மன்ருடும்படி வேண்டிக்கொள்ளுகிறேன். எங்கள்கோவிலில் ஓர்துக்கப் பூசை நடைபெறும்.

வதிரி
7-5-53

அடிகள் அன்பன்
வ. லுக்கேஸ்பிள்ளை

—இங்கிலாந்திலிருந்துவந்த கப்பற் பிரயாணி ஒருவர் ஓர்செய்தியுடன் சென்ற 1952-ம்ஆண்டு ஆடி மாதம் 14-ந்திகதி பிற்பகல் 4-44 மணிக்கு ஏடினிலே கடலிற்போட்ட போத்தல் ஒன்று சென்ற சித்திரை 21-ந்திகதியன்று 12-30 மணிக்கு இலங்கைக் கரையை—அதாவதுவட்டுவாஎனுமிடத்துக்கரையை வந்தடைந்திருக்கிறது. இந்தப்பிரயாணத்துக்கு ஒன்பதுமாதங்களுக்குமேல் அதற்குச் சென்றிருக்கிறது.

### தெரிவுப்பரீட்சை

சென்றவருடம்நடந்தேறிய தெரிவுப் பரீட்சையில் தகுதியற்றவர்களென்று முடிவுசெய்யப்பட்ட மாணவர்கள் மற்ருெருசந்தர்ப்பம் அருளப்படவிருக்கின்ருர்கள். அவர்கள் இவ்வருடமும் அப்பரீட்சை எடுக்கலாமென்று வித்யாதிபதி டக்ளர் எச். டபிள்யு. ஹவுஸ் அவர்கள் கலாசாலைகளின் தலைவர்களுக்குத் தெரிவித்திருக்கின்ருர். இவ்வருடப்பரீட்சையிலும் அவர்கள்தவறிஞல் கலாசாலைகளைவிட்டு வெளியேற வேண்டியதுதான்.

முற்றுத் தாய்நாடுதிரும்பினுரெனினும் நற்சுகமெய்தி நீடூழிவாழ்ந்து இறைவன் பணியில் ஈடுபட்டுவரத் திருவருளை இரந்துகொள்ளுகின்றேன்

—நிருபர்.

# பாலர் பக்கம்

## அண்ணா சொல்வது

அன்பான சகோதரங்களே!

மானிடராகிய எமக்கு ஆறுதல்தரும் "இதோ உன் தாயார்" என்னும் வசனத்தைக் கன்னிமரியம்மாள் கேள்வியுற்றதும் துக்க மேலீட்டினால் அவர் இறந்திருக்க வேண்டியது. ஏன்? ஏனெனில், மாற்றத்தைக் கவனியுங்கள். குருவுக்குப் பதிலாய்ச் சீஷன், யேசுவுக்குப் பதிலாய் அருளப்பர் மகனாகக் கொடுபடுகிறார். தேவசுதனுக்குப் பதிலாய்ச் சிருட்டிகள். ஆயினும் எம் மட்டில் கொண்ட அன்பின் நிமித்தம் தேவதாயார் இம்மாற்றத்தை ஏற்றுக் கொள்ளுகிறார். பாவிகளான எங்களை மக்களாக ஏற்றுக் கொள்ளுகிறார்.

யேசுநாதர் அருளப்பரைத் தமது மாதாவிடம் ஒப்படைத்த பொழுது பின்கண்டவாறு சொன்னதுபோல் ஆயிற்று. "என் பலியினால் மானிடரின் பிதாவும், இரட்சகரும் ஆகிறேன். இவர்கள் பச்சிளம் குழந்தைகள். ஓர் அன்னையின் அன்பும், அரவணைப்பும் அவர்களுக்குத் தேவை. ஆகையால், சக்திநிறைந்த மாதே அவர்களுக்கு ஓர்மாதாவாய் இரும். என்னை நீர் நேசிக்கிறது போல, நான் அவர்களை நேசிக்கிறது போல, நீரும் அவர்களை நேசியும். நீர் அவர்களுக்குச் செய்வதெல்லாம் எனக்கே செய்வதாகும். மனித இரட்சணியத்தின் நலன்களை எல்லாம் உம்மிடத்திலேயே ஒப்படைத்து விடுகிறேன்."

இவைகளை உங்கள் மனதில் ஆழ்ந்து யோசித்து, தேவமாதாவின் வணக்கமாசமாகிய இம்மாசத்தில் தேவதாயாரைச் சங்கித்து அவரை நேசித்துச் சேவித்து வாருங்கள்.

உங்கள் அன்புள்ள
அண்ணா

## முன்னேறு

1

கல்விக் காலம் போய்விட்டால்
காலம் பின்னே வாராது
செல்வப் பாலா! இப்போதே
சிந்தித் தேநீ முன்னேறு

2

சோம்பிச் சோம்பித் தூங்காதே
சோர்வுற் றேநீ ஏங்காதே
தேம்பிக் காலம் போக்காதே
தீரங் கொண்டே முன்னேறு

3

அஞ்சி யஞ்சி மாளாதே
ஆண்மை யற்றே வாழாதே
நெஞ்சில் வஞ்சங் கொள்ளாதே
நேர்மை யுற்றே முன்னேறு

4

அன்பு உன்னை முன்னேற்றும்
அறிவும் உன்னை முன்னேற்றும்
இன்சொல் உன்னை முன்னேற்றும்
இன்றே பெற்று முன்னேறு

"ஜெயம்"

## கடைசி முத்தம்

என்பெயர் தாஸ். எனக்கு ஆட்டுக்குட்டி, பூனைக்குட்டி, நாய்க்குட்டி, கோழிக்குஞ்சு, புறாக்குஞ்சு என்றால் அதிகபிரியம். அவைகளோடு நாள் முழுதும் விளையாடினாலும் எனக்குச் சலிப்புவராது. நீண்டசெவிகளைத் தொங்கப்போட்டுக்கொண்டு ஆட்டுக்குட்டி ஒருபக்கமாகத் துள்ளித்துள்ளி ஓடும்போது நானும் சந்தோஷத்தால் துள்ளுவேன். பூனைக்குட்டியும், நாய்க்குட்டியும் தங்கள் சின்னக்கண்களாலே பந்தைப்பார்த்து, சின்னவாய்களாலே கவ்வி, சின்னக்கால்களாலே உருட்டி உருட்டி விளையாடும்போது நானும் ஒருசிறுகுட்டியாகி அவைகளோடு விளையாடவேண்டுமென்று ஆசையுண்டாகும்.

என்னுடைய சின்னஞ்சிறு தங்கையிருக்கிறாளே—அவள்தான் இராணி. குப்புறக்கிடந்து தன்னுடைய பிஞ்சுக் கைகளையும், கால்களையும் ஆட்டிஆட்டி அசைப்பாள். அப்போது "இராணி உடும்புபிடிக்கிறாள்" என்று அம்மா சொல்லுவாள். நானோ; இராணி! உடும்புவேண்டாம்; உடும்புக்குட்டி ஒன்று பிடித்துத்தா என்பேன். அவள் தனது பொக்கைவாயால் சிரிப்பாள். பல்லும் இல்லாவிட்டாலும் இராணி என்ன அழகாகச் சிரிக்கிறாள். என்னுடைய வீட்டிலே எத்தனையோபடங்கள் தொங்குகின்றன. ஆனால், எனக்குச் சின்னஆட்டுக்குட்டியைத் தூக்கி வைத்துக்கொண்டிருக்கும் சின்னயேசுவின் படத்திலேதான் அதிகபிரியம்.

ஒருநாள், திடீரென்று பலமாகக் காற்றுவீசியது. வீட்டிற்கு முன்பக்கத்தில் நின்ற தென்னை கள்ளுக்குடித்தவனைப்போல் ஆடியது. எனக்கு அதைப்பார்க்க வேடிக்கையாக இருந்தது. அப்போது மரத்திலிருந்து தும்பால் இழைத்த கூடுஒன்று கீழேவிழுந்தது. ஓடோடியும்சென்று அதைக் கையில் எடுத்தேன். என்னஆச்சரியம்! உள்ளேசிறியஅணில்குட்டிகள்இரண்டு இருந்தன. அவைகள் தங்களுடைய தலைகளை மேலேஉயர்த்தி என்னைப் பார்த்தன. எனக்கு அவைகளின் மேலே அன்பும், ஆசையும் ஆனந்தமும் உண்டாயின. அவைகளின் முகத்தோடு என்வாயைவைத்து 'சில் சில்' என்று சத்தமீட்டேன். அவைகள் என்னைத் தங்களுடைய அம்மா என்றுநினைத்து வால்களை மேலே தூக்கின. அவைகளை மெதுவாகத்தடவிக்கொண்டே வீட்டிற்குள்சென்றேன். இராணியின் முன்னால் குட்டிகளை எடுத்துவைத்தேன். அவள் அவைகளைச் சிறிதுநேரம் கூர்மையாகப் பார்த்தாள். பின்புஅவள் தன்கைகளை ஆட்டிக் கால்களைஉதைத்துப் பொக்கைவாயால் சிரித்தாள். நானும் தங்கையும் சிறிதுநேரம் அணில்குட்டிகளோடு விளையாடிக்கொண்டிருந்தோம்.

அப்போது வீட்டிற்குவெளியே 'சில்சில்' என்ற சத்தம்கேட்டது. குட்டிகளும் பதிலுக்குச் சத்தமிட்டன. மரத்துக்கு மரம்தாவி அணில்அம்மா தன்குட்டிகளைத் தேடிக்கொண்டிருந்தாள். நானோ அணில் குட்டிகளை அவைகளுடைய அம்மாவிடம் சேர்க்க விரும்பவில்லை. அவைகளைக் கூட்டோடு இன்னொரு கூட்டிற்குள் அடைத்துவைத்தேன்.

மறுநாட்காலை வந்தது. அணில் அம்மா வெளியே சத்தமிட்டுக்கொண்டிருந்தாள். குட்டிகளைக் கூட்டைவிட்டு வெளியேஎடுத்தேன். அவைகள் தங்கள் அம்மாவைக் கூப்பிட்டன. பால்கொடுத்தேன், குடிக்கவில்லை; பழம்கொடுத்தேன், தின்னவில்லை. முத்தம்கொடுத்தேன், முதுகைத்தடவினேன், கேட்கவில்லை. அவைகள் தங்கள்அம்மாவையே கூப்பிட்டுக்கொண்டிருந்தன.

என்னசெய்வதென்று தெரியாமல் சுற்றுமுற்றும் பார்த்தேன். சற்றுத் தூரத்தில் மேய்ந்துகொண்டிருந்த தன்அம்மாவுக்கு ஆட்டுக்குட்டி துள்ளித்துள்ளி விளையாட்டுக் காட்டிக்கொண்டிருந்தது. முற்றத்தில் நாய் தன்குட்டிகளை நக்கிக்கொண்டே பால்கொடுத்துக் கொண்டிருந்தது. திண்ணையில் பூனைக்குட்டிகளுக்கு வாலையாட்டிஆட்டி விளையாட்டுக் காட்டிக்கொண்டிருந்தது தாய்ப்பூனை. என் கைகளிலிருந்த அணில் குட்டிகளைப் பார்த்தேன். அவைகள் இடைவிடாமல் அம்மாவையே கூப்பிட்டுக்கொண்டிருந்தன. எனக்கு அவைகளின்மேல் இரக்கம்உண்டாயிற்று. உங்களைஇதோ உங்களுடைய அம்மாவிடம் சேர்க்கிறேன் என்று சொல்லிக்கொண்டே அணில்குட்டிகளுக்குக் கடைசிமுத்தம் ஒவ்வொன்றுகொடுத்தேன். ஒருமரத்திலிருந்து தாய்அணில் குழந்தைகளைக் கூப்பிட்டுக்கொண்டேயிருந்தாள். நான் அவள் காணும்படியாகத் தும்புக்கட்டோடு குட்டிகளையுங்கொண்டு கொய்யாமரத்திலேறி ஒரு கொப்பில்வைத்தேன். பின்னர் கீழே இறங்கிவந்து வீட்டுவாசலில் நின்று பார்த்துக்கொண்டிருந்தேன். அணில் அம்மா பாய்ந்துபாய்ந்துசென்று தன் குட்டிகளை அணைத்தாள். அம்மாவைக்கண்ட சந்தோஷத்தால் குட்டிகள் சத்தமிட்டன. அம்மாவும் சத்தமிட்டுத் தன்அன்பைக் காட்டினாள். அணில்அம்மா தன்வாலையாட்டி உயர்த்தி எனக்கும் தன்நன்றியைத் தெரிவித்தாள். நானும் என்கையை அசைத்து என்சந்தோஷத்தைக் காட்டினேன். இராணியும் ஏதோ விளங்கினவள்போல் தன்கைகளையும், கால்களையும் ஆட்டிஆட்டிச் சிரித்தாள்.

'போன்'

## அருளும் மேரியும்

ஞானோபதேச வகுப்பு முடிந்ததும் பிள்ளைகள் எழுந்து விளையாடத் தொடங்கினர். ஆனால், அருளும், அவன் தங்கை மேரியும் வீட்டை நோக்கி நடந்துசென்றனர். அப்போது மேரிதன்னுடைய தமையனைப்பார்த்து: "அண்ணா, இன்று எனக்குச் சுவாமியார் சொன்னது நன்றாய் விளங்கிற்று; ஆமாம், அண்ணா நாங்கள் பிறரில் அன்பாய் இருந்தால்—ஏழைகளில் இரங்கினால் தானே சின்ன யேசுவும் எங்களில் அன்பாய் இருப்பார்; எங்களில் இரங்குவார்; ஆனால், அம்மா...

"நீ கவலைப்படாதே தங்கைச்சி; நாங்கள் எங்கள் நல்லமாதிரிகையால் அம்மாவை நல்லவழிக்குக் கொண்டு வரலாம்" என்று அருள் கூறினான். கடைசியாக இருவரும் தங்கள் இல்லம் போய்ச் சேர்ந்தனர்.

அருளும், மேரியும் செல்வவந்தர் வீட்டுப் பிள்ளைகள். அவர்களுக்கு வேண்டிய சகலமும் அங்கு நிறைவாக இருந்தன. அவர்கள் பெற்றாரும் தங்கள் பிள்ளைகளைக் கண்ணின் மணிபோலக் காத்து வந்தனர். ஆனால், அவர்கள் பிறர்நேசம் இல்லாதவர்கள். ஏழைகள் யாராவது வந்து பிச்சை கேட்டால் அடித்து விரட்டுவார்கள். அருளும், அவன் தங்கையும் செய்வது இன்னது என்று அறியாது பேசாமல் இருப்பார்கள்.

இருவரும் வீடுவந்து சேர்ந்து தாயார் கொடுத்த காப்பியை அருந்தியபின் விளையாடச் சென்றனர். அன்று ஏனோ அவர்களுக்கு விளையாட்டில் மனம் இல்லை. அங்கேஇருந்த ஓர் கல்லின்மேல் அமர்ந்தனர்.

"மேரி, அம்மா ஏழைகளுக்கு ஏதாவது கொடாவிட்டாலும் எங்கள் அன்பான வார்த்தையினால் அவர்களுக்குக் கருணை காட்டலாம் அல்லவா?"

"ஆமாம், அண்ணா, நாங்களும் அம்மாவைப் போல் பெரியதவறு செய்துவிட்டோம். ஆனால், அப்படிச் செய்யப்படாது; அம்மாவுக்கு நல்ல புத்தி வரப்பண்ண வேண்டும்."

உங்களுக்கு நேரம்போனது கூடத் தெரியவில்லையா? என்றுதாயார் கூறியது கேட்டு இருவரும் எழுந்து சென்றனர். பின்னர் எல்லாரும் ஒருங்கு கூடிச் செபித்தபின் அருளும் மேரியும் பாடங்களை ஆயத்தம்செய்து சாப்பிட்டுவிட்டு நித்திரைக்குச் சென்றனர்.

மறுநாள்காலை நித்திரைவிட்டு எழுந்தபின் இருவரும் கோயில்சென்றனர். அங்கு பூசைமுடிந்ததும் திரும்பி வீட்டுக்குச் சென்றனர். அங்கு மேரி தன்னுடைய தமையனைப் பார்த்து: "அண்ணா, நாம் இன்று எமது காலை ஆகாரத்தில் ஒருவர் உடையதை வைத்துவிட்டு மற்றதை இருவரும் சாப்பிடுவோமா?" என்றாள். அருளும் அதற்கு உடன்பட்டு ஒருவருடையதை இருவருமாகச் சாப்பிட்டனர். பின்னர் வெளிவாயிலண்டை போய் ஏழைச் சிறுவரின் வரவைக் காத்து நின்றனர்.

சற்றுஎட்டத்தில் இரு ஏழைச் சிறுவர் வரக்கண்டதே ஓடோடியும் சென்று அவர்களை அழைத்துவந்து, அவர்களுக்கெனத் தாங்கள் வைத்திருந்த உணவை எடுத்துக் கொடுத்து அவர்களைச் சாப்பிடச் செய்தனர். பிறகு அவர்களைத் தங்கள் தோட்டத்திற்கு அழைத்துச் சென்றனர். அங்கு அவர்கள்விரும்பிய மலர்களைக்கொய்து கொடுத்தனர். அந்த ஏழைச் சிறுவர்களும் இவர்களுடன் சேர்ந்து விளையாடியபின் விடைபெற்றுச்சென்றனர். இப்படியே தினமும் அந்த ஏழைச் சிறுவர் வந்து தங்களுக்கென வைத்திருக்கும் உணவைச் சாப்பிட்டபின் அவர்களுடன் விளையாடிவிட்டுச் செல்வார்கள்.

இவர்களின் அன்பையும், இரக்கத்தையும் நாளடைவில் கண்ட அவர்களின் தாயாரும் அவர்களைப் பின்பற்றினாள். ஏழைகளில் அன்பும், இரக்கமும் காட்டத்தொடங்கினாள். அவர்களுக்கு நன்றாகத் தருமஞ் செய்தாள். அப்போது அருளும், மேரியும் அடையும் சந்தோஷத்தைப் பற்றிக் கூறுவானேன்?

அருளானந்தம் இராயப்பு,
அல்வாய் மேற்கு

# "கைவிடப்பட்டதில்லை"

(சென்றவாரத் தொடர்ச்சி)

சாந்தநாயகியின் தந்தை ஏதோ சிந்தனையுடன் மெல்லமெல்ல நடந்து போய் அக்குகையை அணுகினார். இதற்கெல்லாம் ஏதோஒருசக்தி அவர் உள்ளத்திலிருந்து அவரைப் "போ போ, குகையைநெருங்கிப்போ" என்று தூண்டியது—வேண்டியது. ஆகவே, அவர் செல்லவேண்டியவரானார். காந்தம் இரும்பைஇழுப்பதுபோல் அவரையும் அக்குகை இழுத்தது. ஏற்கனவே அவர்கண்ட அவ்விளம்சோடி இன்னுமே மெய்மறந்து செபத்தில் ஆழ்ந்திருப்பதையும், அவைகள் ஏதோசில வார்த்தைகளை முணுமுணுப்பதையும், எல்லாவற்றிற்குமமேலாக ஒரேதிக்கை அதிககவனத்துடன் ஆடாமல்அசையாமல் நோக்கிக்கொண்டிருப்பதையும் கணுற்றார். அவர்கள் நோக்கிய அதேதிக்கை அவரும் நோக்கினார். அங்கேஅவர் கண்டதென்ன? அழகே உருவான, சாந்தமேவடிவான ஒரு புண்ணியசிலியின் சொரூபத்தைக்கண்டார்; அவளது பூக்கரங்களில் ஒரு செபமாலை ஊசலாடிக்கொண்டிருக்கக் கண்டார். இதற்குமுன் அதைப் போன்ற சிலைகளையுள்ள ஓர்சிலையை அவர்எங்கும் பார்த்ததில்லை. அது ஓர் சிலைஅல்ல. ஆனால், உண்மையாகவே ஒருபுண்ணியமாது தரிசனம்கொடுப்பது போன்றிருந்தது அவருக்கு. அப்படி அதன்மதிவதனத்தைப் பார்த்த அளவில் கல்லாய்ச் சமைந்துவிட்டார். அப்பொழுதுதானே அவரிடம் ஏதோ மாறுதல் உண்டாயிற்று. கடைசியாகத் தன் சுயநிலைக்குவந்தார். தனக்குச் சற்றுமுன்னால் ஆழ்ந்த தியானத்திலிருந்த உருவங்களில்ஒன்று தன் புதல்வி, மற்றது அவள்சிநேகிதிஎன்று அவர்அறிந்துகொள்ள அவருக்குஅதிக நேரம் பிடிக்கவில்லை. அவர்களுக்குத் தெரியாமல், சந்தடிசெய்யாமல் தன் இல்லம்ஏகினார். என்றுமில்லாத ஒருவித மனச்சந்தோஷத்துடன்.

"சாந்தம்! செபித்ததுபோதும், வா வீட்டிற்குப்போவோம்; நேரமாயிற்று" என்று மரியமலர்கூறியதும் சாந்தநாயகி அமைதியாய் எழுந்து "ஆம்! மலர், நானும் நேரம்போனதே தெரியாமல் அப்படியே செபத்தில் மூழ்கிவிட்டேன்; வா சீக்கிரம் வீடு செல்வோம்" என்று கூறிக்கொண்டு தன்சகி மரியமலருடன் கோவிலைவிட்டு வெளியேறி வீட்டுக்குஏகினர்.

அடிமேல் அடிவைத்து மெல்ல மெல்ல ஓர்பூனைபோல்நகர்ந்து தனது வீட்டிற்குள் நுழைந்தாள் சாந்தநாயகி. அவள்தந்தை அதைக்கண்டுங் காணாதவர்போல், பத்திரிகைபடிப்பதாகப் பாவனைசெய்துகொண்டிருந்தார். பின்பு ஒருவிதமாகக் கனைத்துக்கொண்டு "யார்வந்தது?" என்று கேட்டார்.

"நான்தான் அப்பா" என்றாள் மகள் பயப்பிராந்தியுடன். அவள்தொனியில் நடுக்கம் கலந்திருந்தது.

"ஏன்பிள்ளே, இவ்வளவுநேரம்?"

"பள்ளிவேலை கொஞ்சம் அதிகம் அப்பா இன்றைக்கு"

"அப்படியா? சரி! உன்வேலையைப் பார்."

"நல்லது அப்பா."

அடுத்தநாள் சாந்தநாயகி பாடசாலை செல்லும் நேரம்பார்த்து: "சாந்தம்! பாடசாலையைவிட்டு வரும்போது நீ அன்றைக்குக் கொண்டுவந்த அந்த வேதபுத்தகத்தை மறந்துபோகாமல் கொண்டுவா; நான் அதைப்படிக்கணும்; நல்லதா?" என்றார் அவளின் அப்பா.

இந்தவாசகத்தை— என்றுமில்லாத வசனத்தைக் கேட்டதும் அவளால் அதைநம்பமுடியவில்லை. "நான் என்ன கனவுகாண்கின்றேனா? அல்லது எதிர்மறையாக அப்புத்தகத்தைக் கொண்டுவாராதே!" என்று கூறுகிறாரோ என்று அபிப்பிராயப்பட்டாள் சாந்தநாயகி.

பின்பு "உங்களுக்கு ஏதுக்கப்பா அது? நீங்கதானே அதைக் கொண்டுவந்ததற்காக என்னை அடித்தீர்கள் கொண்டுவரக்கூடாது என்றுசொல்லி, அப்படியிருக்க இப்ப......"

போனதுபோகட்டும் சாந்தி; நான் இப்பொழுது புதுமனிதன்; நீ அப்புத்தகத்தை—"கைவிடப்பட்டதில்லை" என்ற புத்தகத்தை — திரும்பிவரும்போது கொண்டுவா" என்றார் அவர்.

"அப்பா! தாங்களா இப்படிப்பேசுவது? உண்மையில் என்செபம் கேட்கப்பட்டதுஎன்பதே இதன்அர்த்தம்; ஆகா! நான் பாக்கியசாலி; விடாப்பிடியாக நான்செய்தசெபம் வீண்போகவில்லை; அப்படியில்லாதுபோனால் "தேவதாயில் நம்பிக்கை வைத்தவர்கள் ஒருபோதும் கைவிடப்பட்டதில்லை" என்று அவர்கள் இயம்புவார்களா?" சுபம்!

---

## கத்தோலிக்க தமிழ் எழுத்தாளர் பேரவை கோயம்புத்தூரில் நடைபெறும்

தமிழ்இலக்கியக் கழகத்தின்ஆதரவில் நடைபெற்றுவரும் கத்தோலிக்க தமிழ்எழுத்தாளர்பேரவை நிகழும்ஆண்டு கோயம்புத்தூரில் மேமாதம் 21-ஆம்நாள் தொடங்கி, 24-ஆம் நாள்மட்டும் நடைபெறும். தமிழ்நாட்டின் பலபாகங்களிலிருந்து கோவையில் எழுத்தாளர்பலர் கூடுவர்என எதிர்பார்க்கப்படுகிறது. இக்கூட்டங்களுக்குத் தமிழ்நாட்டின் நான்குமேற்றிராணிமார் தலைமைதாங்குவர். அர்ச். சூசையப்பர் கல்லூரிப் பேராசிரியர் தோமஸ் சீனிவாசன்அவர்கள் பேரவையைத் திறந்துவைப்பார்கள். அறிஞர்பலர் கத்தோலிக்குச்சிந்தனையை எழுத்தாலும், வானொலிபோன்ற ஏனைய சிந்தனைபரப்பும் கருவிகளாலும் எவ்வாறு பரப்பலாம்என ஆராய்வர். மகாவந். தோமஸ் பானுந்து, மகாவந். வெண்மணி செல்வநாதர், மகாவந். M. ஆரோக்கியசாமி, திருவாளர்கள் இரத்தினம், A. T. அந்தோனிசாமிப்பிள்ளை, இலங்கைவித்துவான் F. X. நடராஜா, வண. ஆ. யோ. அடைக்கலம் முதலியோர் விரிவுரைகள் நிகழ்த்துவர்.

மேலும் பிற்பகல் பொதுக்கூட்டங்கள் நடைபெறும். பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை, பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், ஔவை துரைசாமிப்பிள்ளை ஆகியஅறிஞர்கள் கத்தோலிக்கஎழுத்தாளர்கள் தமிழ்இலக்கியத்துக்கு ஆக்கிய தொண்டினைப்பற்றிப் பேருரைகள் நிகழ்த்துவர்என எதிர்பார்க்கப்படுகின்றது.

கோயம்புத்தூருக்கு வருபவர் தம்சொந்தச்செலவில் வரவேண்டும். ஆனால், அங்கு அவர்கள் மேன்மைதங்கிய கோயம்புத்தூர் மேற்றிராணி ஆண்டவர் அவர்களின் விருந்தினராக வரவேற்கப்படுவார்கள். பேரவைக்குவருபவர் மேமாதம் 21-ஆம்நாள் காலையில் எதிர்பார்க்கப்படுவர்.

தமிழ்இலக்கியக் கழகத்தின் உறுப்பினர், கத்தோலிக்குத் தமிழ் எழுத்தாளர், இன்னும் இலக்கியத்துறையிலும், அப்போஸ்தலத்துவத்திலும் ஈடுபாடுடைய இருபாலாரும் பேரவையிற் கலந்துகொள்ளுமாறு அழைக்கப்படுகின்றனர்.

பேரவையிற் கலந்துகொள்ள விரும்புவோர் மேமாதம் 15-ஆம் நாளுக்குமுன் கீழ்க்கண்டமுகவரிக்கு எழுதி வரவேற்புச்சீட்டைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

வண. சேவியர் தனிநாயகம்
தமிழ் இலக்கியக் கழகம்,
தூத்துக்குடி.

தூத்துக்குடி
21-4-53

---


# கேத்திர கணிதம்

முதலாம்பாகம் ஆதாரகேத்திரகணிதம்

## ஆறும் தரத்துக்குப் பாவிக்கக்கூடியது

விலை ரூபா 1-75

கிடைக்குமிடம்:

அர்ச். சூசைமாமுனிவர் அச்சியந்திரசாலை,
யாழ்ப்பாணம்.


---

## திருவிளக்கு

ஓர் கோயிலில் உள்ள நற்கருணை வெளிச்சம் நூர்ந்துபோய் விட்டது. சிறுவன் ஒருவன் கிறுதியடியில் முழந்தா ளிட்டுச் செபித்துக்கொண்டிருப்பதைக் குருவானவர் கண்டார். கண்டு, "விளக்கு நூர்ந்து வெகுநேரம் ஆயிற்று" என்று கேட்டார்.

"முக்கால் மணித்தியாலம் இருக்கும் சுவாமி."

"அவ்வளவு நேரமும் இங்கிருந்தாயா?"

"ஆம்சுவாமி! விளக்கு நூர்ந்துபோன படியால் நான் இருக்கிறேன். சின்னயேசு விளக்கு இல்லாமல் இருப்பது சரியல்லவே சுவாமி."

* * *

அன்று ஒருநாள் ஒரு குருவானவர் குளிர்நிறைந்த மேல்நாட்டிலிருந்து வெப்பம் நிறைந்த தேசத்திற்குப் புகைவண்டியில் பயணஞ் செய்துகொண்டிருந்தார். அவர் ஏறியிருந்த வண்டியில் ஒரு புறொட்டஸ்தாந்த போதகரும் இருந்தார். குருவானவர் அவருடன் சற்றுவேளை சம்பாஷித்துவிட்டுத் தமது கடமைச் செபத்தைச் சொல்லும் பொருட்டு மந்திரமாலையை எடுத்தார். போதகரும் தமது சட்டைப் பைக்குள்ளிருந்து ஒரு சிறு புத்தகத்தை எடுத்து வாசிக்க ஆரம்பித்தார்.

தமது கடமைச் செபம் முடிந்ததும், பொழுது போக்கிற்காக யாருடன் சம்பாஷிக்கலாம் என்று யோசித்தார் குருவானவர். யோசித்துக் கொண்டு வண்டியில் இருந்த மற்றப் பிரயாணிகளைக் கவனித்தார். அவர்களிற் சிலர் மவுனமாய் இருந்தனர். வேறுசிலர் கொட்டாவி விட்டும், தூங்கிக் கொண்டும் இருந்தனர். ஐந்து பிள்ளைகளுடன் பிரயாணம் பண்ணிக்கொண்டிருந்த ஓர்மாது தனது பையிலிருந்து செபப் புத்தகம் ஒன்றை எடுத்து வாசித்தாள். அதன்பின் செபமாலையை எடுத்து ஒவ்வொரு மணியாக எண்ணிச் செபித்தாள்.

அதைக்கண்ட குருவானவர் அவர்கள் கத்தோலிக்கர் என்று நிச்சயித்து அவர்களுடைய சுகசேமங்களை விசாரித்து, அவர்களுடன் சம்பாஷித்து நீண்ட பிரயாணத்தை இனிதே முடித்தனர். இவர்கள் கத்தோலிக்கர் என்று நிச்சயிக்க ஏதுவாய் இருந்தது என்ன?

---

## நாடு சங்கதிகள்

—போர்த்துக்காலின் பிரஸ்தாபம் பெற்ற பிரதமரான டக்றர் அன்ரோனியோ சலாசர்அவர்கள் அந்நாட்டுஅரசாங்கத்தில் மந்திரிபதவிவகித்த இருபத்தைந்தாம்ஆண்டு நிறைவுவிழாவைச் சென்ற 27-ந்திகதி கொண்டாடிய போது போர்த்துக்கேயமக்களெல்லாம் ஆர்ப்பரித்து அவரை வாழ்த்தினார்கள்.

—பிரித்தானிய பிரதமரான திரு. வின்ஸ்ரன் சேர்ச்சில்அவர்கள் இற்றைக்கு எட்டுவருடங்களின்முன் ஏற்க மறுத்துவிட்ட கௌரவபட்டத்தை—அதாவது காட்ரரின் நைற்பட்டத்தைச் சென்றமாதம் 25-ந்திகதியன்று ஏற்று அகிலமுழுவதையும் பிரமிக்கச் செய்திருக்கின்றார். இனிமேல் அவர் "சேர்வின்ஸ்ரன் சேர்ச்சில், கே. ஜி." என அறியப்படுவார்.

— எலிசபேத் மகாராணியாருக்குப் பிரித்தானிய சாம்பிராச்சிய நாடுகள் இரு தங்கவளையல்களைச் சன்மானிக்க ஒன்றுசேர்ந்திருக்கின்றன. வருகிற ஆனி 2-ந் திகதி நடந்தேறவிருக்கின்ற மகாராணியாரின் முடிசூட்டுவைபவத்தின்போது அவர் உபயோகிக்கும் இராசசின்னங்களில் இவைகளும் அடங்கியிருக்கும். வளையல்களும் அதிகம்புராதன இராசஅணிகலங்களாகும்.

—மற்றெந்தநாடுகளைக் காட்டிலும் அதிகமான அரசாங்க விடுமுறைநாட்களாக 27 நாட்களைக்கொண்ட இந்தியா புத்தரின்பிறந்த பெருநாளையும் ஓர் அரசாங்க விடுமுறைநாளாக அனுசரிக்கவிருக்கின்றது. கிறிஸ்மஸ் எனப்படும் கிறீஸ்துநாதரின் பிறந்த பெருநாளும், மகமதுபிறந்தபெருநாளும் இந்தியாவில் அரசாங்க விடுமுறை நாட்களாகும்.

—வடக்குப்பம்பாயிலே தொழிலாளி ஒருவன் தனதுமனைவி பீடிகள் புகைத்ததற்காக அவளது உடைகளில் தீமூட்டிய குற்றத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டிருக்கின்றான். மனைவியின் பீடிகள்புகைக்கும் பழக்கத்தையிட்டு இருவருக்குமிடையில் ஏற்பட்டசச்சரவின் போதே அவளின் உடைகளில் அவன் தீமூட்டிவிட்டானாம். மனைவி பிந்தஆஸ்பத்திரியில் இறந்துபோயினாள்.

—அடுத்துநிகழும் ஆனிமாதம் 2-ந் திகதியன்று எலிசபேத் மகாராணியாரின் முடிசூட்டுவிழாவைத் தொடர்ந்து நடைபெறவிருக்கும் ஒன்றும்மூன்றில் இரண்டுமைல் நீளமான பெரியஊர்வலப்பாதையில் இருபதுலட்சம்மக்கள் கூடியிருப்பார்களென மதிப்பிடப்படுகிறது. இத்தொகை 1937-ம்ஆண்டு ஆறாவதுஜோர்ஜ் அரசரின் முடிசூட்டு விழாவைத் தொடர்ந்து நடைபெற்ற ஊர்வலத்திற்கூடிய மக்கள்தொகையிலும் இருமடங்காகுமாம்.

# வேத வினாவிடை

## — VIII —

### ஆவியானவர் எங்களை அர்ச்சிப்பவர்

### (3) தேவசிநேகம

(முன்தொடர்ச்சி)

76. தோத்திரமும் அதற்குவிரோதமான பாவமும்ஆனவை என்ன ?

பிதாவானவரின் சிருட்டிப்பு, சுதனுனவரின் உத்தானம், ஆவியானவரின் வருகைமுதலிய தேவகிரியைகளுக்காக நன்றிகூறுவதற்கு ஞாயிறு கடன்திருநாட்களில் சரீரப்பிரயாசையான வேலைகளிலிருந்து ஒய்ந்துஇருப்பதே தோத்திரமாம். சரியான முகாந்திரமில்லாமல், அல்லது விசேஷ உத்தரவின்றி ஞாயிறு–கடன்திருநாட்களில் சரீரப்பிரயாசையான வேலைகளைச் செய்வதே தோத்திரத்துக்கு விரோதமான பாவமாம்.

77. இலங்கையில் அநுசரிக்கப்படவேண்டிய கடன்திருநாட்கள் எவை?

நத்தார், விருத்தசேதனம், ஆரோகணம், அமலோற்பவம், ஆரோபணம் என்னும் திருநாட்களாம்.

78. நமக்குத் தேவதோத்திரக் கடமை ஞாயிறு கடன்திருநாட்களில் மாத்திரம் உண்டோ ?

இல்லை. ஞாயிறு கடன்திருநாட்களில் பாரதூரமான தேவதோத்திரக் கடமை உண்டு. ஆனால் மறுநாட்களிலும் காலைமாலைச்செபம், அசனத்துக்கு முன்பின்செபம், பிரதானசமயங்களிற் செபம், திரிகாலச்செபம் முதலியவற்றைச்சொல்லி நாம் தேவனைத் தோத்திரிக்கவேண்டும். நாள்தோறும் திருச்சபையின் கணிதச் செபங்களைச் சொல்லிவருவது மிகவும் உத்தமமான தேவதோத்திரம.

> "உம்மைத் தோத்திரிக்க நடுச்சாமத்தில் எழுந்திருந்தேன் — ஒருநாளிலே ஏழுதரம் உமக்குத் துதிபுரிந்தேன்"—சங். CXVIII. 62, 164.

79. உத்தரிப்பும் அதற்குவிரோதமான பாவமும்ஆனவை என்ன ?

தேவாதீனத்தினுலோ நமதுதெரிவினுலோ வரும்பாடுகளைச் சகிப்பதினுலும், திருச்சபைநியமிக்கிற தபசையோ அபராதத்தையே நிறைவேற்றுவதினுலும், தபசிளக்காரங்களைப் பெறுவதினுலும் மன்னிக்கப்பட்ட பாவங்களுக்குரிய முடிவுள்ள வேதனைக்கடனைத் தீர்ப்பதே உத்தரிப்பாம். திருச்சபைநியமிக்கிற ஒருசந்திசுத்தபோசனத்தையோ அபராதத்தையோ நிறைவேற்றுமலும், வேறு கடமையான தபசுகளைச் செய்யாமலும்இருப்பதே உத்தரிப்புக்குவிரோதமான பாவமாம்.

> "நீங்கள் உங்கள் அக்கிரமங்களுக்கெல்லாந் தவம் புரியுங்கள்"— எசேக். XVIII. 30.

80. இலங்கையில் அனுசரிக்கப்படவேண்டிய ஒருசந்தி, சுத்தபோசன நாட்கள் எவை ?

தபசுகாலத்தில்வரும் எல்லாவெள்ளிகளும், நத்தாருக்குமுந்தியநாளுமே ஒருசந்திநாட்களாம். வருஷத்தில் வரும் எல்லாவெள்ளிகளும், தபசுகாலத்தில்வரும் புதன்களும், நத்தாருக்கும் ஆரோபணத்துக்கும் முந்திய நாட்களுமேசுத்தபோசனநாட்களாம். ஆனுல், ஞாயிறிலோ கடன்திருநாளிலோ ஒருசந்தி அல்லது சுத்தபோசனக்கடமை நேரிட்டால், அக்கடமை நீக்கப்படும்.

81. ஒருசந்தி சுத்தபோசனம் காக்க ஆருக்குக்கடமையுண்டு?

இருபத்தொருவயசுக்கு மேற்பட்டவர்களுக்கும் அறுபதுவயசுக்கு உட்பட்டவர்களுக்கும் ஒருசந்தி காக்கக் கடமையுண்டு. ஏழுவயசுக்கு மேற்பட்டவர்களுக்குச் சுத்தபோசனம் காக்கக் கடமையுண்டு.

82. காணிக்கையும் அதற்குவிரோதமான பாவமும்ஆனவை என்ன ?

சருவேசுரனுக்குப் பூசைப்பலியை ஒப்புக்கொடுப்பதும், அவருக்கு நம்மையும் நம்முடையவைகளையும் பிரதிஷ்டைபண்ணியோ, நேர்த்திசெய்தோ, ஒறுத்தோ, கையளித்தோ விடுவதுமே காணிக்கையாம். ஞாயிறு கடன்திருநாட்களில் முழுப் பூசைப்பலியை ஒப்புக்கொடாம விருப்பதும், பிரதிஷ்டை பண்ணப்பட்டவைகளைத் தப்புப்பிரயோகம் பண்ணுகிற தேவதுரோகமும், செய்தநேர்த்தியை நிறைவேற்றுமையும், கடமையானஒறுத்தலையும் கையளிப்பையும் செய்யாமல்விடுவதும் காணிக்கைக்கு விரோதமான பாவங்களாம்.

> "சூரியன் உதயந்தொட்டு அஸ்தமனபரியந்தம் எவ்விடத்திலும் பலியிடப்படும்"—மலக். I. 11.

(தொடரும்)

# மாதோட்டத் தபால்

(நாட்டுத்தூதன்)

—:—

ஐயா! காலவேறுபாட்டினூற் போலும் கைக்கடிகாரமெல்லாம் கண்டவர் நின்றவர் கைகளிலெல்லாம் ஏறிக்கொண்டு பெரிதும்இடர்ப்படுகின்றனவாம். அவற்றுளே பெரும்பாலானவை புதிதாகவந்திறங்கும் இந்தியரின் கைகளையே கண்டடைகின்றனவாம். அதற்குக்காரணம் அவர்கள் வேஷம் மாற்றி அரசாங்ககாவலரின் கைப்படாது தங்களைக் காத்துக்கொள்வதற்கென்றே சொல்லலாமாம். இவ்விதம் கைக்கடிகாரங்கள் பெருகியமையால் அவற்றிற்கிருந்த மதிப்பும் பெரும்பாலும் குறைந்துவிட்டதாம். அவற்றைப்பாவிக்கின்றசிலரிடம் நேரம்கேட்டால் பதில்சொல்லமுடியாது பரக்கப்பரக்க விழிக்கின்றனராம். இன்னும் வன்சொற் பிரயோகமும், கைலஞ்சமும் வரவரஅதிகரித்து வருகின்றனவே அல்லாது குறைந்தபாடாயில்லையாம். இவைகளெல்லாம் ஏழைகளைத்தான் இம்சைப்படுத்துகின்றனவாம். இவைகள் எப்போதுதான் குறையுமோ?

**உழும்இயந்திரங்கள் :—** இந்நாட்டின் மத்தியாகவிளங்கும் உயிலங்குளத்து ஐக்கியசங்க நெல்வயல்களை உழுவதற்கென யந்திரங்கள்வந்து குவிந்திருக்கின்றன. இவைகள்எல்லாம் திரு. றெபேட் என்பவரது தலைமையிலே விமரிசையாகப் பணியாற்றுகின்றன. ஒரு யந்திரம் ஒருநாளில் நாலுஏக்கர் வயலை உழுகிறதென்றும், ஒருஏக்கரை முதல்முறைஉழும்செலவு பதினெட்டு ரூபாவென்றும், இன்னும்இந்தயந்திரங்கள் அருவிவெட்டவும், அவற்றைக் களத்தில் சேர்க்கவும், கதிர்மிதிக்கவும், வாழை, தென்னை முதலிய பயிர்களை நடக்குழிகள் தோண்டவும் உதவுமென்றும் சொல்லப்படுகிறது. அதனுல் கமக்காரர் குறைந்தசெலவுடன் கூடுதலான நெல்வயல்களைப் பண்படுத்திக்கொள்ள முடிகிறது.

**சிறுபோகக்கூட்டம் :—** இப்பகுதியிலே இம்முறை மழை மிகக்குறைவாகப் பெய்தபோதிலும் பிறவிடங்களில் பெய்தமழையால் கட்டுக்கரைக் குளம் போதியநீரைக் கொண்டிருக்கிறது. அதனுல் சிறுபோகவேளாண்மை செய்வதையிட்டுச் சென்ற 27-ந்திகதியன்று உயிலங்குளக் கிராமக்கோட்டுவங்களாவில் மன்னுர் உதவி ஏசன்றரின் தலைமையிலே ஓர் கூட்டம் நடந்தேறியது. அதில் பெருந்தொகையான கமக்காரரும், கமவிதானைமாரும், நீர்ப்பாசன உத்தியோகஸ்தர்களும் கலந்துகொண்டார்கள். அப்போது திரு. ஏ. ஆர். ஜேம்ஸ், திரு. தம்பையா என்போர் கட்டுக்கரைக் குளத்தின் தற்போதைய கேவலநிலையைப்பற்றிப் பேசினர். ஈற்றிலே சென்றவருடத்திற்போல ஆறுக்கு ஒன்றுவீதம் செய்யப்பட வேண்டுமென்னும் தீர்மானத்துடன் கூட்டம் கலைந்தது.

**சுதேசவைத்தியர்சங்கம் :—** மன்னுர்ப்பகுதியிலுள்ள சுதேசவைத்தியர்களின்சங்ககூட்டம் சென்ற 25-ந்திகதி உயிலங்குளக் கத்தோலிக்கபாடசாலையில் திரு. ஜோண் மார்க், ஜே. பி. அவர்கள்தலைமையில் நடைபெற்றது. அப்போது இலவச சுதேசமருந்துச்சாலைகள் ஸ்தாபிப்பதுபற்றியும், புதிய அங்கத்தவர்களைச் சேர்ப்பதுபற்றியும் கலந்து ஆலோசிக்கப்பட்டது.

**சனசமூகநிலையம் :—** சிலவருடகாலமாக அயர்வுற்றுத் தூக்கத்திலிருந்த உயிலங்குளப் பாலகயேசுவின் சனசமூகநிலையம் மீண்டும் புத்துயிர் பெற்றுச் சமீபத்திலே தனது பொதுக்கூட்டத்தை விமரிசையாக நடத்தியது. அப்போது உயிலங்குளக் கட்டளைச் சுவாமியார் தலைவராகவும், தலைமை ஆசிரியர் எஸ். அந்தோனிப்பிள்ளை காரியதரிசியாகவும் ஏகமனதாகத் தெரியப்பெற்றனர். மறுஉத்தியோகஸ்தரின் தெரிவுடனும், தலைவரின் சொற்பொழிவுடனும் கூட்டம்முடிவுற்றது.

**தீச்சேயற்பெருக்கம் :—** ஓர் காலத்திலே அடக்கமும், அமைதியும் நிலவியிருந்த இப்பகுதியில் தற்போது துப்பாக்கிச்சூடு, கத்திக்குத்து கதித்துவரக் காண்பது கவலைக்கிடமாகும். மன்னுரில் ஓர் பொலிஸ் ஸ்ரேஷனும், போதிய பொலிஸரும் இருந்தும் தீச்செயல்கள் கதித்துவருவது அபிமானிகளுக்குக் கவலைக்குமேல்கவலையைத் தந்துகொண்டிருக்கின்றது. சமீபத்திலே புங்கந்தாழ்விலும், 11-ம்கட்டையைச்சேர்ந்த செட்டிகமத்திலும் நடந்தகுரூரகுத்துக்கொலைகள் எவர்க்குமே திகிலை உண்டுபண்ணின. தீச்செயல்கள் குறையவேண்டுமானுல் பொலிசருடன் சேர்ந்து நாட்டுமக்களும் ஒத்துழைக்க வேண்டியது அவசியம் என்க!

# ஜனுதிபதியும் சமாதானமும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வோம், செகஞ்செழிக்கச் செய்வோம், வருக" என்று அவர் கூறினர்.

ஐசன்ஹாவரின் அழைப்பு மனத்தூய்மையோடு விடுக்கப்பட்ட அழைப்பாகும். சோவியற்அரசைச் சமாதானத்துக்காக ஒத்துழைக்கும்படி அழைக்கும்போது அமெரிக்கஅரசாங்க தலைவர் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசவில்லை. உண்மையான சமாதானம், சம்பூரணமான சமாதானம் ஏற்படுமாயின் அது ஏற்படவேண்டும் என்பதுவே அமெரிக்கவரசின் பேரவா. ஜனுதிபதி சொல்வதுபோல, மக்களின் உடலைவருத்தும் ஆயுதச்சுமையும், உள்ளத்தைவருத்தும் பயச்சுமையும் தொலைந்து ஒழியும் என்பதில் சந்தேகம் என்ன? அப்படிப்பட்ட அமைதியும், இன்பமும் நிரம்பிய உலகை நிர்மாணிக்க அமெரிக்கவரசுதயார். சோவியற் ருஷியா தயாரா?

## நேர்த்தியின் பூர்த்தி

அண்டினேரைக்கைவிடாத அர்ச். சதாசகாயமாதாவே! நான் இரந்துகேட்ட மன்ருட்டை மனமுவந்து தந்தபடியினுல் அதற்காக உமக்குத்தோத்திரம்செலுத்துகின்றேன். நேர்த்தியின்படி இதனைப் பிரசித்தப்படுத்துகிறேன்.

D. Rose

Kurunagala


நமது அச்சியந்திரசாலைப் புத்தகசாலையில்

## விற்பனைக்கிருக்கும் கத்தோலிக்க புத்தகங்கள்

| | | ரூ. ச. |
|---|---|---|
| சின்னக்குறிப்பிடம் | ... | 15 |
| பெரியகுறிப்பிடம் | ... | 30 |
| மெய்விவாகக் குறிப்பிடம் | ... | 25 |
| உறுதிப்பூசுதற்குறிப்பிடம் | ... | 05 |
| பிரசித்த ஆராதனையின் சாதாரணசெபங்கள் | ... | 2-00 |
| திவ்வியபூசையின் சாதாரணசெபங்கள் | ... | 60 |
| மோட்சபாதை (கலிக்கோ) | ... | 5-00 |
| " " (தோல்) | ... | 7-50 |
| முத்தித் திறவுகோல் (தோல்) | ... | 3-50 |
| ,, ,, (கலிக்கோ) | ... | 2-50 |
| செபச்செண்டு | ... | 1-00 |
| திவ்வியபூசைப்பலியின் பேரில் தியானங்கள் (அச்சில்) | ... | |
| யேசுநாதரின் சுவிசேஷம் அல்லது நான்கு சுவிஷேங்களின் ஒப்புமை | ... | 2-95 |
| பசாம் ... | ... | 1-50 |
| சுவிசேஷ விரித்துரை (பசாமுடன்) | ... | 6-50 |
| (பசாமில்லாமல்) | ... | 5-00 |
| சத்தியவேத ஞானக்கீர்த்தனங்கள் | ... | 75 |
| லத்தீன் (1-ம் பகுதி நோட்டுகளுடன்) | ... | 2-25 |
| தமிழ் 2-ம்பகுதிநோட்டுகளுடன் | | 2-25 |
| நவதின உற்சவம் | ... | 75 |
| சற்பிரசாத அன்பன் | ... | 30 |
| தருமஅப்பம் | ... | 1-00 |
| தேவமாதாவின் வணக்க மாதம் | ... | 1-50 |
| மரியாயின் மாசில்லாத இருதயப் பொக்ஷம் | ... | 1-50 |
| மருதமடு யாத்திரைக் கைத்துணை | ... | 50 |
| பத்திமாமாதாவும் செபமாலையும் | ... | 25 |
| அவர்கள் மூன்றுசிறுவர்கள் (பத்திமா) | ... | 2-50 |
| மகாமனந்திரும்புதல் இயக்கப்பிரசங்கங்கள் | ... | 1-00 |
| ஞானவொடுக்க பிரசங்கங்கள் (அச்சில்) | ... | |
| திவ்வியபூசைமகத்துவம் | ... | 2-50 |
| பூசைஉதவி மந்திரம் | | 40 |
| கிறீஸ்துநாதரும் அவருடைய போதனைகளும் | ... | 1-50 |
| ஆண்டவர் சரித்திரம் (Part I) | ... | 90 |
| (Part II) | ... | 90 |
| (Part III) (அச்சில்) | ... | |
| கிறீஸ்துநாதர் சரித்திர ஆராய்ச்சி | ... | 70 |
| பத்திச்சபைகள் | ... | 20 |
| ஆத்துமதரிசனம் | ... | 20 |
| சத்தியவேத தர்ப்பணம் (Part I) போதக காண்டம் | ... | 2-50 |
| தமிழரின் பூர்வசரித்திரம் | ... | 50 |
| ஹெலேனு அல்லது திருக்காய அடையாளம்பெற்ற இலங்கைக்கன்னிகைசரித்திரம் | ... | 35 |
| அர்ச். லூயிமேரி கிறிஞ்ஞோன் சீவியசரித்திரம் | ... | 40 |
| நானே குற்றவாளி | ... | 1-00 |
| வேதாகம வாசிப்பு | ... | 90 |

விலாசம்:

மனேஜர்,

அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,

யாழ்ப்பாணம்.


Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39, Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, May 7-1953